161

தொகுதி 11.] 1932ஞு மேமீ [புகுதி 4.

5 - JUL 1932

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவ

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்ப யாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்க பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்( பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-(

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவ யும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின் றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதி உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற ம மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்த தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னு பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடை ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதக செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவ களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயுப் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

வேலையையும் செய்யக்கூடாதல்லவா?' என்றான். அப்போது அம்மாது, 'நான் உங்களுக்காகத்தான் மாடிமீதுள்ள அறையைச் சுத்தம் செய்து நல்ல படுக்கை யொன்றையும் தயாரித்திருக்கிறேன். படுக்கை யறைக்கு வேண்டிய சாமான்களையுங்கூட நீங்கள் கொடுத்த பணத்தில் வாங்கி வந்திருக்கிறேன். ஆனால் கட்டில் வாங்க முடியாததால் தரையின் மீதே படுக்கையை அழகாக ஜோடித்திருக்கிறேன். மேலும் அதிகமான சாமான்களை நான் இங்கே கொண்டு வந்தால் மற்றவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் உண்டாகுமே என்றும் அஞ்சினேன்' என்று கூறினாள். தினகரன் 'அம்மணியே! அவ்வளவு சௌகரியங்கள் போதும். ஒருநாள் இரவுதான் இங்கு படுத்துப் பார்க்கிறேன். ஆயினும் இந்த நிலாவெளிச்சத்தின் காரணமாக இரவு இனிமையானதாக இருப்பதால் அரைமணிநேரம்வரை இப்படி வயல்களில் உலாத்திவிட்டு வருகிறேன். பிறகு படுக்கைக்குப் போகிறேன். இங்கே உபாயமாகவேனும் ஏதேனும் மதுபான வகை கிடைக்குமோ?' என்று கேட்டான். அவள், 'ஆஹா! அதற்கென்ன தடை, உங்களுக்கு வேண்டிய சௌகரியத்தை உண்டாக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் [illegible] பகல் இரத்தினபுரிக்குச் சென்ற[illegible] புட்டி [illegible] சத்தைக்கொண்டு வ[illegible] என்று கூறிக்கொண்[illegible] பாட்டில்களையும் அ[illegible]சத் திறப்பதற்கு வேண்டிய சாமா[illegible]களையும் கொடுத்தா[illegible]

186568

தினகரன் அந்தப் [illegible]ட்டி[illegible] [illegible] அ[illegible]றில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு [illegible] அருந்திவிட்டுப் புகைச்சுருட்டு ஒன்றைப் புகைத்துக்கொண்டே வெளியில் புறப்பட்டான். அவன் சுமார் முக்கால்மணி நேரம் வரை பக்கத்திலிருந்த தோட்டங்களிலும் வயல்களி

லும் சுற்றித் திரிந்துவிட்டுத் திரும்பினன். அவன் அங்கு சுற்றியபோது, தான் மறுநாள் காலை எப்படி ராஜலட்சுமியைச் சந்திப்பது? அவளைப்பெற்று விட்டதாகவே வைத்துக் கொண்டால் அவளுடன் எப்படி எப்படி யெல்லாம் இன்பத்தை அனுபவிப்பது என்கிற விஷயங்களை யெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்ததால் அவனுக்கு அந்த முக்கால் மணி நேரம் ஐந்து நிமிஷமாகத் தோன்றிற்று. அவன் வீடு திக்குத் திரும்பும்போது மணி பத்து இருக்கும். அம்மாது அவனை வரவேற்றாள். அறையில் ஒரு மேஜையின் மீது பல விதமான ஆகாரவகைகள் வைக்கப்பட் டிருந்ததைக் கண்டான். அவனுக்குப் பசி அதிகமாய் இருந்ததால் அவைகளைச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் ஒருமுறை முதல்தரமான அந்த ஒயினைக் குடித்துவிட்டுப் படுக்லைக்குச் செல்ல முயன்றான். அப்போது அவள் மற்றொரு மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொண்டு அவனை மாடிமீது யழைத்துச் சென்றாள்.

அப்படிச் செல்லும்போதே வழியில் அவள், தினகரனிடம், 'நீங்கள் இதுவரையில் உங்கள் பேர் என்ன? நீங்கள் யார்? என்பதுபற்றி என்னிடம் சொல்லாமல் இருந்ததன் காரணம் மறதியா அல்லது வேண்டுமென்றே சொல்ல வில்லையா? என்பது தெரியவில்லை. நீங்கள் உங்கள் பெயரை என்னிடமும் மறைத்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்தால் சொல்ல வேண்டியதில்லை. இல்லாவிட்டால் தெரிவித்தால் சந்தோஷம்? என்று கேட்டாள். அதற்கு அவன், 'மாதே! நீ புத்தி கூர்மையுடையவளாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவளாகவும் இருப்பதால் உன்னிடம் சொல்ல எனக்கு எத்தகைய ஆட்சேபனையும் இல்லை. நான் கிருஷ்ணகிரி ஜமீன்தாரின் புத்திரன்' என்று தெரிவித்து விட்டான்.

அப்போது அவள், 'தாங்கள் பெரிய அந்தஸ்தைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டுமென்று நான் முன்னமே யோசித்திருந்தேன். நேற்று மாலை நான் அந்த வேலைக்காரி யிடமும் அப்படித்தான் தெரிவித்தேன். எதற்கும் அவ ளுக்கு ஏதேனும் லஞ்சம் கொடுத்தால்தான் சரியாய் இருக் கும். நீங்கள் ஏதாவது என்னிடம் கொடுத்தால் நான் நாளையதினம் காலை அவள் வெளியில் அவளது எஜமானி யுடன் செல்வதற்கு முன் அவளைச் சந்தித்துக் கொடுத்து விட்டு உங்களைக் கவனித்துக் கொள்ளும்படி கூறுகிறேன்,' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட தினகரம் பிரபு, 'ஆஹா! அதில் தடை என்ன இருக்கிறது? எப்படியாவது அவளைச் சந்தோஷப்படுத்தி வைக்க வேண்டியதுதான். இதோ இந்தப் பத்து பவுன் நோட்டை அவளிடம் கொடு. இல்லை; இல்லை. பெண்களுக்கெல்லாம் எப்போதும் பொன் பைத்தியம் அதிகமாதலால் பத்து பவுன்களையே கொண்டு போய்க் கொடுப்பதுதான் சிலாக்கியம், காரியம் முடிந்தால் இன்னும் அதிகமாகவும் கொடுக்கத் தயாராய் இருப்பதாகத் தெரிவி,' என்று சந்தோஷத்துடன் கூறிக்கொண்டே பத்து பவுன்களை அவளிடம் எண்ணிக் கொடுத்தான்.

அதைப் பெற்றுக்கொண்டு அம்மாது, 'பிரபுவே, இந் தப் பணம் நாளை காலை எட்டு மணிக்குள் அந்த வேலைக்காரி யிடம் போய்ச் சேர்ந்து விடும்' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட தினகரம் பிரபு புன்னகையுடன், 'நீ வீண் காலதாமதம் செய்யாமல் இக்காரியத்தை முடித்து விடு. இந்த அறையில் நான் எங்கே படுத்துக் கொள்வது? அதிருக்கட் டும். நான் நாளை காலை அணிந்து செல்வதற்காக வென்று வாங்கப்பட்ட எளிய உடை எங்கே?' என்று கேட்டான் அவன் தற்புகழ்ச்சியை விரும்புகிறவன் என்பதை அறிந்து

கொண்ட அம்மாது, 'நீங்கள் கேவலம் கோணிப்பையை அணிந்து கொண்டாலும் அழகாகத்தான் இருப்பீர்கள். ஆகவே இப்போது நான் கொண்டு வந்திருக்கும் எளிய உடையை அணிந்தாலும் நீங்கள் யாரோ கனவான் என்றே தெரிந்து விடும்' என்று அவனைப் புகழ்ந்து பேசினாள்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவள் ஒரு கையில் சிறு விளக்கும், மற்றொரு கையில் எளிய உடையின் மூட்டையையும் எடுத்துக்கொண்டு மாடிக்கு வழிகாட்டிக் கொண்டே சென்றாள். மாடியிலிருந்த ஒரு அறை அசுத்தமானதாய்க் காணப்பட்டாலும் அங்கு வைக்கப்பட்டிருந்த படுக்கையும் இதர சாமான்களும் மட்டும் தினகரம் பிரபு சகஜமாய் வீட்டில் உபயோகிப்பவைப் போன்றவைகளாகவே இருந்தன. வாசனையுள்ள வைக்கோல் பரப்பப்பட்டு அதன் மீது மிருதுவான படுக்கை போடப்பட்டிருந்தது. எனினும் அந்த இடம் அவனுக்குப் பிடிக்கவில்லை. அது சௌகரியமான இடமல்லவென்றும், ஒரு நாளைக்குமேல் அங்கு தங்க முடியாதென்றும் அவளிடம் சொல்லலாமென்று நினைத்தானென்றாலும் தன்னுடைய காரியத்தில் இவ்வளவு அக்கரையுடன் இருக்கும் அவள் மனம் புண்படும்படி ஒன்றும் கூறலாகாதென்று எண்ணிச் சும்மா இருந்து விட்டான். மேலும் அவள் தன்னால் இயன்ற வரை அவனுக்குச் சௌகரியம் ஏற்படுத்திக் கொடுக்க முயற்சி செய்திருக்கிறாளல்லவா? அப்படிப்பட்ட ஒருத்தியின் மனம் நோகும்படி நடந்து கொள்வது நியாயமல்ல அல்லவா? ஆதலின் அவன் அந்த இடத்தை விரும்புகிறவன்போல் முகத் தோற்றத்தை உடையவனாய்ப் புன்சிரிப்புடன், 'பெரிய பிரபுவின் வம்சத்தைச் சேர்ந்த நான் இவ்வாறு ஒரு எளிய வீட்டில் வந்து தங்கும்படியான சமயமும் நேரிட்டிருப்பதைப் பார்த்தால் ஆச்சரியமாக இல்லையா?' என்று கேட்டான்.

அப்போது அம்மாது, 'பிரபுவே! நீங்கள் இப்போது உமது மனத்துக்கேற்ற ஒரு பெண்ணை அடைவதற்காகப் பலவித கஷ்டங்களையும் அனுபவிப்பதென்று துணிந்துவிட்டிருக்கிறீர்கள். இப்போது இங்கு சிறிது நேரம் கஷ்டப்படுவதும் அதில் சேர்ந்ததே என்று தெரிந்து கொள்ளுங்கள்' என்று கூறித் தேற்றினாள். அவனும், 'ஆம், அதை நினைக்கும் போதுதான் இந்தக் கஷ்டங்களெல்லாம் அடியோடு மறந்து விடுகின்றன. அந்த எளிய உடையின் மூட்டையை அவிழ்த்து நாளை காலை நான் அவற்றை அணிந்து கொள்வதற்காகத் தயாராக வை' என்று கூறினான். அவளும் அவனது கட்டளையின் படியே உடைகளை எடுத்து அங்கிருந்த மேஜையின் மீது வைத்துவிட்டுத் தன் கையிலிருந்த சிறு விளக்கையும் அறையின் ஒரு புறத்தில் வைத்த பின்னர் தன் விருந்தாளியாக வந்த தினகரம் பிரபுவினிடம் விடைபெற்றுக் கொண்டாள்.

அம்மாது அவ்வறையை விட்டுச் சென்றதும் தினகரம் பிரபு தனது ஆடைகளைக் கழற்றிவிட்டு ஒரு வேஷ்டியுடன் படுத்துக்கொண்டு உறங்கி விட்டான். அவன் அதிக அயர்ச்சியை அடைந்திருந்த படியால் அப்படுக்கை அசௌகரியமானதாய் இருந்தும் அதையும் கவனியாமல் மெய் மறந்து தூங்கி விட்டான். அறையைவிட்டு வெளிச்சென்ற மாது உறங்காமலேயே இருந்து நடுநிசியில் கோணிப்பையால் தேகம் முழுதும் போர்த்திக்கொண்டு மெதுவாக அவ்விடுதியை விட்டுப் புறப்பட்டுச் சென்றாள். அவள் வயல்களையெல்லாம் தாண்டிச்சென்று அங்குள்ள ரஸ்தாவின் ஓரத்தில் பெரிய மரத்தடியில் போய் நின்றாள். அவள் அங்கு நின்றதும் அங்கேயே மற்றொரு மரத்தின் மறைவில் பதுங்கியிருந்த ஒரு ஆடவன் அவள் முன் வந்து நின்றான்.

அந்த ஆடவன் யாரென்று நினைக்கிறீர்கள்? அவன் தான் நமது பிரசித்தி பெற்ற ராட்சஸ குப்பன். அவன் அம் மாதைப் பார்த்து, 'மரகதம்! எல்லாம் ஒழுங்காக அமைந் திருக்கிறதா?' என்று கேட்டான். உடனே அவள், 'ஆம், எல்லாவற்றையும் சரிப்படுத்தி வைத்திருக்கிறேன். அந்த இளைஞன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். நான் மெதுவாக அவன் படுத்திருக்கும் அறையின் கதவைத் திறந்து பார்த்தேன். நன்றாகக் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான்,' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட ராட்சஸ குப்பன், 'சரிதான். அவனிடம் கொள்ளை யடிப்பதற்குப் போதுமான சொத்து இருக்கிறதா? நாம் கஷ்டப்படுவதற்கேற்ற கூலியாவது கிடைக்க வேண்டுமே,' என்றான். அதற்கு அவள், 'உன் பாகத்துக்கு மட்டும் நூறு பவுன் கிடைத்தால் போதாதா?' என்று கேட்டாள். இதற் குள் அவர்கள் வயல்களைக் கடந்து விடுதிக்குச் சமீபத்தில் வந்து விட்டார்கள்.

ராட்சஸ குப்பன் மரகதத்தைப் பார்த்து, 'அவனிடம் அவ்வளவு சொத்து இருக்கிறதென்பது உனக்கு நிச்சய மாய்த் தெரியுமா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'நான் நேற்று இரவு நடுக்குப்பத்துக்கு வந்து உன்னைச் சந் தித்த போதே அவன் ஐம்பது பவுன் பெறுமான நகைகளை அணிந்து கொண்டிருக்கிறானென்றும், அவனது பணப்பை யில் மட்டும் சதா நூறு பவுனுக்குக் குறையாமல் இருப்பது நிச்சயமென்றும் கூறினே னல்லவா? அவனுடைய நகை களை நமது கோபாலன் தம்பதிகளிடம் கொடுத்தாலும் அவர் கள் எளிதில் ஐம்பது பவுன் கொடுத்து விடுவார்கள். அதே நகைகளைக் கடையில் வாங்கப்போனால் இதைப்போல் மூன்று மடங்கு அதிகமாக விலையாகும்' என்று விவரமாகத்

தெரிவித்தாள். அதைக் கேட்டுச் சந்தோஷ மடைந்த ராட்சஸ குப்பன் அவனது கையிலிருந்த தடியை இறுகப் பிடித்துக்கொண்டு 'அப்படியானால் மிக சந்தோஷம். எனக்கு வேண்டிய ஆயுதங்களெல்லாம் என்னிடமிருக்கின்றன, எனினும் பள்ளம் தோன்றுவதற்கு ஏதேனும் வேண்டுமே' என்று கேட்டான்.

உடனே அம்மாது, 'அதை நான் மறந்து விடவில்லை. விடுதியில் அதையும் வாங்கி வைத்திருக்கிறேன். மேலும் நான் செய்த மற்றொரு விசேஷத்தையும் தெரிவிக்கிறேன் கேள். அவனுடைய படுக்கையை வைக்கோலை அடர்த்தியாகப் பரப்பிவிட்டு அதன்மீது அமைத்திருக்கிறேன்' என்று மிகச் சாமர்த்தியம் வாய்ந்தவள் போல் கூறினாள். அதைக் கேட்டதும் ராட்சஸ குப்பன், 'ஓ, எனக்குத் தெரிந்துவிட்டது. நாம் அவனது கழுத்தில் கத்தியை வைத்து அறுக்கும் போது இரத்தம் தரையில் சொட்டாமலிருப்பதற்காக நீ அவ்வாறு செய்திருக்கிறாய் போலும்! நீ செய்த யோசனை மிகச்சரியானதுதான். இரத்தக் கறை இருந்தால் அது மிக ஆபத்தானது, எவ்வளவுதான் சுத்தப்படுத்தினாலும் அந்தக் கறைமட்டும் போகாது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த இளைஞன் யார் என்று நீ விசாரித்து அறிந்து கொண்டாயா'' என்று கேட்டான். அதற்கு அவள், 'அவன் ஒரு பிரபு என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீ இக்காரியத்தில் இறங்க பயப்படுவாயோ' என்று பரிகாசமாகக் கேட்டாள். அப்போது அவன் வெறுப்புடன், 'பயமா? நான் என் பயப்படவேண்டும்! அவன் பிரபுவாயிருந்தாலென்ன? வேறு யாராகத்தான் இருந்தாலென்ன? நான் அவர்களுக்கெல்லாம் பயப்படமாட்டேன்' என்று அலட்சியமாகக் கூறினான்.

அதைக் கேட்ட மாகதம், 'அப்படியானல் அவன் யாரென்று உனக்கும் தெரிந்து விடட்டுமே. அவன் கிருஷ்ண கிரி ஜமீன்தாரின் குமாரன்' என்று சொன்னதும், அச்சொல் ராட்சஸ குப்பனுடைய காதில் விழுந்ததும் அவன் தனக்கும் தெரியாமல் திடீரென்று, ஆச்சர்யத்துடன்; 'கிருஷ்ணகிரி ஜமீன்தார் குமாரனு?' என்று கேட்டான். அவன் கேட்ட மாதிரியைக்கண்டு ஆச்சரிய மடைந்த அவள், 'ஆம்; அவன் கிருஷ்ணகிரி ஜமீன்தாரின் குமாரனே. அவனுடைய பெயரைக்கேட்ட மாத்திரத்தில் நீ இவ்வளவு ஆச்சர்ய மடைந்தாயே; அவனைப்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஆம்; அவர்களுடைய குடும்ப சம்பந்தமாய் ஒரு காரியம் நான் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனல் அது சுமார் 20-வருஷங்களுக்கு முன் நடந்த சங்கதி. ராஜசேகரன் என்னும் ஒருவன் என்னை அதற்காக அமர்த்திக் கொண்டான். எனினும் அது நடந்துபோன விஷயம். இப்போது பணம் வருவதா யிருந்தால் சரி! நமது காரியத்தைக் கவனிப்போம். இப்போது அதைப்பற்றிக் கவலைப்படுவானேன்' என்று கூறினன்.

இவ்வாறு அவர்கள் பேசி முடிவதற்குள் மாகதத்தின் விடுதிக்கு அவர்களிருவரும் வந்து சேர்ந்தார்கள். உடனே மாகதம் அவனை அழைத்துக்கொண்டு மெதுவாக விடுதிக்குள் நுழைந்தாள். பிறகு கதவை மிக ஜாக்கிரதையுடன் சார்த்திக் கொண்டார்கள். ராட்சஸ குப்பன் பல தடவைகளில் அவ்விடுதிக்குச் சென்றவனுதலால் தாராளமாக அதில் நுழைந்து ஆகார பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்றுன். அவன் அதிக தூரத்திலிருந்து நடந்து வந்திருந்தபடியால் பசி அதிகமாய் இருக்கவே அங்கிருந்த பதார்த்தங்களை அருந்த ஆரம்பித்து விட்டான். வயிற்றுக்

குச் சிறிதும் வஞ்சனை செய்யாமல் வேண்டிய அளவு சாப்பிட்டான். மதுபான வகைகளை அருந்த மறந்து விடவில்லை. பத்து நிமிஷங்களுக்குள் அவன் சாப்பாடு முடிந்தது. சகஜமாகவே துஷ்டபுத்தியையுடைய அவன் மதுபானம் அருந்தியதும் தலைகால் தெரியாமல் எத்தகைய துஷ்ட காரியங்களையும் செய்யத் தலைப்பட்டான்.

அப்போது அவன் சாப்பிடுவதையெல்லாம் அருகில் மௌனமாக அமர்ந்திருந்து கவனித்துக் கொண்டிருந்த மரகதம், 'சரி, இனி நாம் ஒரு நிமிஷமும் வீண் காலதாமதம் செய்ய வேண்டாம். ஏனெனின், விடியற் காலைக்குள் பிரேதத்தை அப்புறப்படுத்தி விடவேண்டிய சிரமம் இருக்கிறது,' என்று மெதுவான குரலில் தெரிவித்தாள். உடனே அவள் எழுந்து மேஜை மீதிருந்த ஈட்டியை எடுத்துக்கொண்டு அதன் முனை கூராக இருக்கிறதா என்று தன் விரல்களால் தடவிப் பார்த்தாள். அப்போது ராட்சஸ குப்பன், 'ஓஹோ! நீ உன் வேலையை அந்த ஆயுதத்தால் முடிக்கப் போகிறாய் போலும்!' என்று கேட்டான். அதற்கு அவள் 'அக்காரியத்தை யார் செய்தால் என்ன? நாம் மாடிமீது ஏறும் போதே அவன் விழித்துக்கொண்டால் அல்லது நமது காரியத்தைத் தொடங்கும்போது அவன் எதிர்க்க முயன்றால் அவனைச் சமாளிப்பதற்காக இருவரிடமும் தக்க ஆயுதம் இருப்பது நன்மைதானே' என்று தெரிவித்தாள்.

உடனே அவன், 'சரி, காரியத்தைத் தொடங்குவோம்' என்றான். மரகதம் இடது கையில் விளக்கை எடுத்துக் கொண்டும் வலது கையில் ஈட்டியை ஏந்தியும் ராட்சஸ குப்பனுக்கு வழிகாட்டிக்கொண்டே மாடிகள்மீது ஏறினாள். அவர் நடக்கும் சத்தமே யாருக்கும் கேட்காதபடி காலடி மீது காலடி வைத்துக்கொண்டு பூனையைப்போல் நடந்தார்கள்.

தினகரம் பிரபு படுத்திருந்த அறையின் அருகில் சென்றதும் கதவோரமாக நின்று உள்ளே நடப்பதைக் கவனித்தார்கள். தினகரம் பிரபு அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருக்கிறான். ஆகவே அவர்கள் கதவைத் திறந்து கொண்டு மெதுவாக உள்ளே நுழைந்தார்கள். முதலில் சென்ற மரகதம் நேராக தினகரம் பிரபுவின் படுக்கையின் அருகில் சென்றாள். அவள் கையில் சிறு விளக்கை வைத்திருந்ததால் அதன் ஒளியில் தினகரம் பிரபுவின் முகம் காணப்பட்டது. அவன் நன்றாய்த் தூங்குவதை அவளும் அவனும் பார்த்தார்கள். ஆனால் அவர்கள், அவனை எமனுலகம் அனுப்பும் வேலையைச் செய்ய முயன்றபோது மரகதம் திடீரென்று பயமும் ஆச்சரியமும் அடைந்தவள்போல் தனக்கும் தெரியாமல் ஓவென்று அலறினாள். கையிலிருந்த விளக்கும் கீழே நழுவிவிட்டது. உடனே அந்த அறை முழுதும் இருட்டாய்விட்டது.

அவள் அலறியதனாலும், விளக்கைக் கீழே போட்டதாலும் ஏற்பட்ட சத்தத்தால் தினகரம் பிரபு பீதியுடன் விழித்துக் கொண்டு அலறி எழுந்தான். அவன் தன் படுக்கையிலிருந்து கீழே குதித்த வண்ணம், 'திருடர்கள், கொலை' என்று எவ்வளவு உரக்கக் கத்த முடியுமோ அவ்வளவு உரக்கக் கத்தினான். மரகதம் தன் கையிலிருந்த விளக்கு நழுவியவுடனேயே புத்தி சுவாதீனமடைந்து, ராட்சஸ குப்பனுடைய கையை இறுகப் பற்றிக்கொண்டு, அவன் மேற்கொண்டு ஒரு காரியமும் செய்ய முடியாதபடி தடுத்து, மெதுவான குரலில், 'வெளியே போ' என்று உறுதியாகச் சொன்னாள். அப்போது ராட்சஸ குப்பன் சந்தேகமும் ஆச்சர்யமும் அடைந்தான். அங்கு நடந்தவற்றைக் கண்ட அவனது மூளை கலங்கிவிட்டபடியால் தன்னிஷ்டப்படி எக்காரியத்தையும் செய்ய முடியாதவனாய், அவளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதைத்

தவிர வேறு வழியில்லாமல் அவ்வறையை விட்டு வெளியே சென்றான். உடனே அவள் அவ்வறையின் கதவை வேகமாக மூடிக்கொண்டு தினகரம் பிரபுவின் படுக்கையின் அருகில் சென்று, 'ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. வாயை மூடுங்கள்—சத்தம் வேண்டாம்' என்று அதிகார தோரணையில் அதட்டினாள். ஆனால் தினகரம் பிரபு அச்சத்தால் நடுநடுங்க வாய் குழற, 'ஆனால் இப்போது ஏற்பட்ட சத்தம் என்ன? தயவு செய்து கடவுள்மீது ஆணையாக என்னை எவ்விதத்திலும் துன்புறுத்த வேண்டாம். வேண்டுமானால் என் பணப்பையைக் கொடுத்துவிடுகிறேன். அதற்காக என்னை ஒன்றும் இம்சை செய்யாதே' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அதற்கு அவள், 'நீங்கள் இங்கு எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. நான் உங்களை எவ்வகையிலும் தொந்திரவு செய்யமாட்டேன். உங்களுடைய பணப்பையும் எனக்கு வேண்டியதில்லை' என்று சமாதானம் கூறினாள். அப்போதும் தினகரம் பிரபு தனது படுக்கையின் பக்கத்தில் நின்று கொண்டு பயத்துடன், 'ஆனால் இப்போது இங்கே ஏதோ பயங்கரமான சத்தம் கேட்டதே அது என்ன? நீ இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிறாய்? உன் கையில் ஏதோ பள பளவென்று காணப்படுகிறதே அது என்ன?' என்று கேட்டான். தான் கையில் கொண்டுவந்த ஈட்டியைத் தன் ஆடையில் மறைத்துவைத்து விட்டிருந்த அவள், 'அது ஒன்றுமில்லை. மெழுகுவர்த்தி விளக்கு கீழே விழுந்துவிட்டது. அதை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன்,' என்று பதில் அளித்தாள். அந்த அறை மிகவும் இருட்டாக இருந்ததென்றாலும், அந்த இரவில் நிலாவெளிச்சம் பிரகாசமாய் இருந்ததாலும் அது அந்த அறையின் ஜன்னல் வழியே

அவ்வறையில் பிரகாசித்ததாலும் தன் அருகில் மாகதம் என்னும் அம்மாது நிற்பதை ஒருவாறு கண்டு கொண்டான். அவள் தனது உடையால் படுக்கைக்குப் போனவளைப்போல் காணப்படவில்லை. எனினும் அவளுடன் அங்கே வேறு யாரும் இல்லாமல் இருந்ததால் தினகரம் பிரபு ஒருவாறு தேறுதல் அடைந்தான்.

அப்போது அவள், 'யாரோ ஒரு குடிகாரன் நமது விடுதியில் நுழைய முயன்றதால் இச்சம்பவம் நேரிட்டது. ஆயினும் நீங்கள் உடனே உடைகளை அணிந்து கொண்டு இங்கிருந்து போய்விட வேண்டும். ஏன், எதற்காக என்றெல்லாம் கேட்கக் கூடாது. நான் சொன்னபடி சிறிதும் தாமதமின்றிச் செய்யுங்கள். இருட்டிலேயே உடையை அணிய வேண்டும். இதோ இன்னும் சில நிமிஷங்களில் இங்கே வருவேன். ஆனால் உங்களுக்கு எத்தகைய ஆபத்தும் ஏற்படாதென்று நிச்சயமாகக் கூறுகிறேன். அதற்காக ஒன்றும் பயப்படாதீர்கள்' என்று சொல்லிவிட்டு அவனுடைய பதிலையும் எதிர்பாராமல் அந்த அறையின் கதவை மூடிக்கொண்டு சரேலென்று கீழே இறங்கிவிட்டாள்.

கீழ் அறையில் ராட்சஸ குப்பன் அவளுடைய வரவுக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவள் தினகரம் பிரபு படுத்திருந்த அறையில் எதிர்பாராத வகையில் அவ்வாறு நடந்து கொண்டதன் காரணம் என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆவலாக இருந்தான். அவள் அவனை அந்த அறையில் சந்தித்து, 'நீ இங்கேயே அமைதியுடன் காத்திரு. பிறகு விஷயங்களை யெல்லாம் விவரமாக விளக்கிக் கூறுகிறேன். முதலில் அம் மனிதன் க்ஷேமமாக வெளியே போய்விட வேண்டும்' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட அவன் கோபங்கொண்டு, 'என்ன,

அவன் நம்மிடமிருந்து தப்பிப் போய்விடவேண்டு மென்கி ருயா?' என்று உக்கிரமாகக் கேட்டான். அவள் அதற்கெல் லாம் சிறிதும் அஞ்சாமல், 'ஆம்; அவன் தப்பிப் போக வேண்டியதுதான். என்னைப்பற்றி உனக்குத் தெரியாதா? நான் எதையும் நன்மைக்காகவே செய்வேன் என்பதை ஞாப கத்தில் வைத்துக்கொள்' என்று கூறினாள்.

அதைக் கேட்ட ராட்சஸ குப்பன், 'சரி, நீ எதையும் நன்மைக்கே செய்வதாக இருக்கலாம். ஆனால் நீ அனுஷ் டிக்கும் முறைகள் மிக ஆச்சர்யமானவையாக இருக்கின்றன' என்று சந்தேக புத்தியுடனேயே கூறினான். அதற்கு அவள், 'ஆம்; நான் அனுஷ்டிக்கும் முறைகள் ஆச்சர்யமாகவே இருக்கும். நீ இங்கேயே உட்கார்ந்திரு. வேண்டுமாயினும் சிறிது வொயினை அருந்து. அதனால் உற்சாகம் ஏற்படும். நான் இன்னும் மூன்று அல்லது நான்கு நிமிஷங்களுக்குள் இவ்விடம் திரும்பி வருவேன். நான் வருகிறவரையில் நீ இருட்டிலேயே இரு. உன் மெழுகுவர்த்தி விளக்கை என் னிடம் கொடு' என்று கூறிக்கொண்டே அதைப் பெற்றுக் கொண்டு அறையின் கதவைச் சாத்திக் கொண்ட வண்ணம் வெளியே சென்றாள்.

இதற்கிடையில் மாடியின்மீதுள்ள அறையில் இருட் டில் தனியாக இருந்த தினகரம் பிரபு தனக்கு எத்தகைய ஆபத்தும் நேராதென்று மரகதம் உறுதி கூறியதனால் சிறிது ஆறுதல் அடைந்தவனுயும், ஆனால் அப்போது நடந்த திடும் பிரவேசமான சம்பவங்களைக் கண்டு ஆச்சர்யமும் சந்தேக மும் கொண்டவனுயும் தன் உடைகளை அணிந்து கொண்ட மறுநிமிஷத்துக்கெல்லாம் மரகதம் கையில் ஒரு சிறு விளக் குடன் அங்கு வந்து தோன்றினள். அவள் எத்தகைய எண்ணத்துடன் அங்கு வந்திருக்கிருள் என்பதை அறியும்

பொருட்டு அவளது முகத்தைத் தினகரம் பிரபு உற்று நோக்கினன். அவளது இயற்கையான குணத்துக்கேற்ப அவள் முகம் கடூரமானதாகத் தோன்றினலும் சிறிது நேரத்துக்கு முன் அவள் அளித்த உறுதிமொழியினின்றும் தவறுவாள் என்று அஞ்சுவதற்கு இடமில்லாமல் இருந்தது. அவளும் அவனை உற்றுப் பார்த்தாள். ஆனல் அவள் என்ன உத்தேசத்துடன் அவ்வாறு பார்த்தாளென்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அப்போது அம்மாது அவனைப்பார்த்து, 'இந்த நடுராத்திரியில் இவ்வளவு அவசரமாக நீ இங்கிருந்து போகவேண்டியதன் காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள நீ மிகவும் ஆவலுடையவனுக இருக்கலாம். ஆனல் இப்போது நான் வாய்திறந்து எதையும் பேசமாட்டேன். இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறுதான் நான் நடந்துகொள்ள வேண்டியதாய் இருக்கிறது. ஆனல் ஒரு விஷயத்தைமட்டும் இப்போது தெளிவுபடுத்தி விடுகிறேன். அடுத்த மாளிகையில் வசிக்கும் நடின மாதின் வேலைக்காரியுடன் நான் பேசியதாகக் கூறியதெல்லாம் பொய். இவ்விஷயத்தில் நான் சிரமப்பட்டு எதையும் விசாரிக்கவே இல்லை, அவள் ஒரு நடினமாது என்பதைத்தவிர அவளைப்பற்றி எனக்கு வேறென்றும் தெரியாது.' என்று கூறினள். அவன் தனக்கு எத்தகைய ஆபத்தும் நேரிடாதென்பதை உணர்ந்து கொண்டு தைரியத்துடன், 'நீ நடந்துகொண்டமுறை மிக அருவருக்கத் தக்கதாய் இருக்கிறது' என்று கடிந்து கூறினன். அவன் அவ்வாறு கூறியதைக்கேட்ட அவள் மிக ஆத்திரத்துடன் தன் காலால் பூமியில் அறைந்து, 'நீ உடனே இங்கிருந்து புறப்படு. இன்னும் ஒரு மணி நேரம் இங்கு காத்திருந்தாலும் இப்போது நான் சொன்னதற்குமேல் ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேன்,' என்று கோபத்துடன் கூறினள்.

அவளுடன் இனியும் பேசுவதில் பயனில்லை என்பதை அறிந்துகொண்ட அவன் அவள் இஷ்டப்படியே அங்கிருந்து புறப்பட்டான். அவளும் அவன் பின்னாலேயே சென்று கதவைத் திறந்து அவனை வெளியே அனுப்பினாள். அவனும் பின்பக்கம் திரும்பிப்பாராமலும் மிக வருத்தத்துடன் அவ்விடத்தை விட்டகன்று வயல்களைக் கடந்து பெரிய ரஸ்தாவுக்குச் சென்றான். அவன் அவ்விடுதியை விட்டுச் சென்றதும் மரகதம் கதவை மூடிக்கொண்டு தன் நண்பன் ராட்சஸ குப்பனைக் காணச் சென்றாள். அவன் கீழ் அறையில் ஒரு நாற்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு அங்கிருந்த மதுபான வகைகளை அருந்திக்கொண் டிருந்தான்.

## 13-வது அத்தியாயம்

———:o:———

### மரகதம்-குப்பன் சம்பாஷணை.

———

ராட்சஸ குப்பனை அந்த அறையில் சந்திப்பதற்கு முன்பு அவள், தான் நடந்து கொண்ட விதத்தைப்பற்றி விவரமாக அவனுடன் பேசுவதென்று யோசித்திருந்தாள். ஆயினும் அவனுடன் பேச வரும்போது அவளுடைய மனம் மாறிவிட்டது. எதையும் கூறுவதில்லை யென்று தீர்மானித்தாள். எனினும் அவர்களிருவரும் அவ்விடுதியை அடைவதற்குமுன் வழியில் பேசிக்கொண்டு வந்தபோது ராட்சஸ குப்பன், தினகரனுடைய குடும்ப சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்தானல்லவா? அதை விவரமாய் அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அவளுக்கு அதிகரித்தது. ஆகவே துஷ்டகுணமுடைய ராட்சஸ குப்ப

னிடம் அவள் மிகச் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டியதாயிற்று. ஆதலின் அவள் தன் தேகத்தின்மீது போர்த்திக்கொண்டிருந்த ஆடையைக் கழற்றி எறிந்துவிட்டு, 'என்ன நீ மட்டும் இன்பமாக மதுபானம் முதலியவற்றைக் குடித்து ஆனந்தமாகக் காலங் கழிக்கிறாயே' என்று குப்பனைப் பார்த்துக் கேட்டாள். அவள் இவ்வாறு கேட்டதில் பொருள் ஒன்றுமில்லை. ஆயினும் சம்பாஷணையை ஆரம்பிப்பதற்காகவே இவ்வாறு கேட்டாள்.

அப்போது ராட்சஸ குப்பன் அதிருப்தியுடன், 'இவ்வாறு எதிர்பாராதவகையில் ஏமாற்றிவிட்ட பின்னர் மறுபடியும் சந்தோஷ முண்டாகவேண்டுமானால் அது எளிதில் முடியக்கூடிய காரியமன்று. நான் ஒரு கோப்பை பிராந்திக்காகவோ, வொயினுக்காகவோ இன்று இரவு இங்கு வரவில்லை என்பதை நீ அறிய வேண்டும். அந்த இளைஞனைத் தப்பிப் போகும்படி நீ முட்டாள்தனமாக விட்டுவிட்டதால் இப்போது எனக்கு நூறு பவுன் நஷ்டமாய்விட்டதே. அதை எனக்கு யார் கொடுப்பார்கள்? என் பங்குக்கு நூறு பவுனுக்குக் குறையாமல் வரும் என்று நீதானே சொன்னாய். அதை நான் மறந்துவிடவில்லை' என்று சொன்னான். அப்போது அவள், 'நீ பேசுவதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது. சில வருஷங்களாகவே நீ என்னை அறிவாய் அல்லவா? இத்தகைய தொழிலில் நான் உன்னை எப்போதேனும் ஏமாற்றியதுண்டா?' என்று வினயமாய்க் கேட்டாள்.

குப்பன்:—இல்லை. நீ என்னை எப்போதும் ஏமாற்றியதில்லை. நாம் இருவரும் சேர்ந்து சில காரியங்களை முடித்திருக்கிறோம். நீ ஒவ்வொரு விஷயத்திலும் நியாயமாகவே நடந்து கொண்டிருக்கிறாய் என்பதில் ஆட்சேபமில்லை. ஆனால் இப்போது நீ என்ன சொல்லுகிறாய்?

மரகதம்:—ஆகவே நான் ஏதேனும் வாக்களித்தால் நீ கட்டாயம் நம்புவாய் அல்லவா?

குப்பன்:—ஆம். நான் உன் வார்த்தைகளை நம்புவேன், ஆயினும் நீ ஒரு விசித்திர மனுஷியாக இருக்கிறாய். நடுக்குப்பத்திலும் கோபாலன் தம்பதிகளின் வீட்டுக்கு வருபவர்களெல்லாம் நீ ஒரு மந்திரக்காரியோ என்று சந்தேகிக்கின்றனர். நான் இவ்வாறு கூறியதால் நீ வருத்தப்படமாட்டாய் என்றே நம்புகிறேன்.

மரகதம்:—மந்திரக்காரியாய் இருந்தால் இப்போது நான் அனுஷ்டிப்பது போன்ற வாழ்க்கையை நடத்த வேண்டியதில்லை. நான் நாளை இரவு ஒன்பதுமணி சுமாருக்கு உன்னை நடுக்குப்பத்தில் நாம் வழக்கமாய்ச் சந்திக்கும் இடத்திலோ அல்லது நீ எங்கு சந்திக்கும்படி கூறுகிறாயோ அவ்விடத்திலோ உன்னைச் சந்தித்து நூறு பவுன்களைக் கொடுத்தால் உனக்குத் திருப்தி ஏற்படுமா? இப்போது ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடாய்விடுமல்லவா? ஆயினும் சிரமப்படாமல் உனக்கு நூறு பவுன் கிடைக்கிறதென்பதை நீ அறியவேண்டும்.

குப்பன்:—நாளை இரவு எனக்கு இத்தொகை கிடைத்து விடுமாயின், அப்போது இன்று ஏற்பட்ட ஏமாற்றத்துக்காக வருந்த மாட்டேன். கையி லகப்பட்ட ஒருவனை வேண்டுமென்றே விட்டுவிட்டது பெரிய ஏமாற்றமல்லவா? எப்படியாவது எனக்குத் தொகை கிடைத்து விடுமாயின் நான் ஏமாற்றமடைந்ததுபற்றிக் கவலைப்படமாட்டேன்.

மரகதம்:—அப்படியானால் நாளை இரவு கட்டாயம் நீ இந்த நூறு பவுனையும் பெறுவாய் என்பது நிச்சயம். தைரியமாக இரு.

குப்பன்:—சரி சந்தோஷம். சிறிது நேரத்துக்கு முன்பு நீ இவ்வாறு ஆச்சர்யப் படும்படியான வகையில் நடந்து

கொண்டதைப்பற்றிச் சிறிது விளக்கமாகக் கூறுவாயா? நீ என் மெழுகுவர்த்தி விளக்கைக் கீழே நழுவ விட்டாய்? ஏன் ஓ வென்று கத்தினாய்? என்னை வெளியே தள்ளி விட்டுக் கதவை மூடிக்கொண்டு உள்ளே என்ன செய்தாய்? முடிவாக அந்த இளைஞன் தப்பிப் போகும்படி ஏன் விட்டு விட்டாய்? இதை யெல்லாம் விவரமாய்க் கூற முடியுமா?

மரகதம்:—நாம் இருவரும் அவனுடைய படுக்கையின் அருகில் சென்று நின்றபோது அவன் திடீரெனக் கண் திறந்து பார்த்ததை நீ கவனிக்க வில்லையா?

குப்பன்:—இல்லை. நான் கவனிக்கவில்லை. அவன் உண்மையிலேயே அவ்வாறு கண் திறந்திருப்பானாயின் அது மிக ஆச்சர்யமான சம்பவமாகவே இருக்கவேண்டும். ஏனெனின் அவன் மிக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்ததை நான் கண்டேன்; அப்படி யிருக்கும்போது அவன் மறு நிமிஷமே எப்படிக் கண்களைத் திறந்திருக்க முடியும்?

மரகதம்:—நான் சொல்வது பொய்யா? நான்தானே அவனுடைய படுக்கைக்கு மிகச் சமீபத்தில் இருந்தேன். அவன் கண்களைத் திறந்து பார்த்ததை நான் என் இருகண்களாலும் பார்த்தேனே.

குப்பன்:—அப்படியே அவன் கண்களைத் திறந்ததாகவே வைத்துக் கொள்வோம். அதனாலேயே நாம் ஏன் நமது காரியத்தை நிறுத்த வேண்டும்.

மரகதம்:—ஆம். நமது காரியத்தை முடித்திருக்கலாம். ஆயினும் எப்படியோ ஒரு விதமான பலஹீனம் என்னைத் தாக்கிற்று. அதன் காரணத்தைக் கண்டுகொள்ள என்னால் முடியவே இல்லை,

குப்பன்:—ஓ! அதையெல்லாம் நான் நம்பமாட்டேன். உனக்காவது, திடீரென்று பலஹீனம் பிடிப்பதாவது? என்னை

முட்டாள் ஆக்கிவிட வேண்டாம். என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். அதெல்லாம் முடியுமா?

மரகதம்:—நான் ஏன் உன்னை ஏமாற்ற வேண்டும் அல்லது முட்டாள் ஆக்க முயலவேண்டும்? உண்மையிலேயே நடந்த விஷயத்தைச் சொல்கிறேன். நான் அவனுடைய படுக்கையின் அருகில் சென்றதும், அச்சத்தாலோ அல்லது அனுதாபத்தாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ எனக்கு ஒருவித உணர்ச்சி திடீரென்று தோன்றவே நான் அதன் வசமானேன். அவனைக் காப்பதற்கு ஏதோ ஒரு அபூர்வ சக்தி வேலை செய்திருக்கிறதென்றே நான் நம்புகின்றேன்.

குப்பன்:—அதென்னமோ எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆயினும் உன் வாயிலிருந்து இப்படிப்பட்ட எதிர்பாராத கதை வருவதைக் காண நான் ஆச்சர்யப்படுகிறேன்.

மரகதம்:—ஆம். நான் ஆச்சர்யமான மனுஷியே. நீ தானே சிறிது நேரத்துக்குமுன் நான் ஒரு மந்திரக்காரியோ எனச் சந்தேகப்படுவதாகக் கூறினாய்.

குப்பன்:—வாஸ்தவந்தான். திடீரென்று அவ்விளைஞன் தப்பிப்போகும்படி நீ நடந்துகொண்டது ஆச்சர்யமல்லவா? நீ சொல்கிறபடியே உனக்குத் திடீரென்று அத்தகைய உணர்ச்சி தோன்றியிருக்கலாம். எப்படியாயினும் நீ வாக்களித்தபடி நாளை இரவு எனக்கு நூறு பவுன் கொண்டுவந்து கொடுத்துவிட்டால் உன்னுடைய அபூர்வ நடத்தையைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன்.

மரகதம்:—நீ நிச்சயமாக என் வார்த்தையை நம்பு. நாளை இரவு ஒன்பது மணிக்கெல்லாம் நூறு பவுன் எடுத்துக்கொண்டு நான் நடுக்குப்பம் வந்து சேரத் தவறமாட்டேன்.

ஆனால் நாம் இந்த விடுதிக்கு வரும்போது வழியில், சில வரு ஷங்களுக்கு முன்னர் நீ இந்த கிருஷ்ணகிரி ஜமீன்தார் குடும்ப சம்பந்தமான ஏதோ வேலையில் ஈடுபட்டதாகக் கூறினாயே. அதென்ன விஷயம்?

குப்பன்:—ஆம்; நான் ஈடுபட்டதுண்டு. ஆனால் அது சரியாகப் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் நடந்த வேலை. அப்போதுதான் இந்த இளைஞன் பிறந்திருந்தான். அவனு டைய தந்தையான கிழப் பிரபுவும் பிழைத்திருந்தார்.

மரகதம்:—யாரோ ராஜசேகரன் என்று சொன்னாயே, அவன் யார்? இதில் அவன் எப்படிச் சம்பந்தப்பட்டான்?

குப்பன்:—ஆம்; ராஜசேகரன்தான் என்னை அவ் வேலைக்கு அமர்த்திக் கொண்டான். அதுவும் மிக வேடிக்கையான சம்பவமே யாகும். அந்த ராஜசேகரன் எப்படித்தான் மர ணத்தை யடைந்தான் என்பது ஆச்சர்யமாகவே இருக்கிறது.

மரகதம்:—ஓஹோ! இந்தக் கதை மிகவும் வேடிக்கை யாக இருக்கும்போலிருக்கிறது. எனக்கும் இன்று உற்சாக மாகவே இருக்கிறது. நீயும் நானும் சிறிது மதுபானத்தை அருந்திவிட்டு உற்சாகமாக எதையேனும் பேசிக்கொண்டிருப் போம்.

குப்பன்:—இதென்ன ஆச்சர்யம்! நீ எப்போதும் இம் மாதிரி சாவகாசமாகப் பேசும் வழக்கமில்லையே! எனக்கொன் றும் ஆட்சேபமில்லை. உன் இஷ்டப்படியே பேசிக்கொண் டிருப்போம்.

மரகதம்:—மனிதர்கள் எப்போதும் ஒரேமாதிரி இருக் கும் வழக்கம் இல்லையல்லவா? இன்று எனக்கு இவ்வாறு தோன்றியிருக்கிறது. பத்தொன்பது வருஷங்களுக்கு முன்

கிருஷ்ணகிரி ஜமீன்தார் குடும்பத்தில் நீ செய்த வேலையைப் பற்றி என்னிடம் விவரமாகக் கூறு.

குப்பன்:—ஆம்; எப்போதும் மனிதர்கள் ஒரேமாதிரி இருப்பதில்லை யென்பது உண்மைதான். நானும் என்னுடைய வேலைகளைப்பற்றியும், நான் அடிக்கும் கொள்ளைகளைப் பற்றியும் யாரிடமும் சொல்லும் வழக்கமில்லை. எனினும் சிற்சில சமயங்களில் எனக்கும் தெரியாமல் நான் பல விஷயங்களைப்பற்றிப் பேசிவிடுவதுண்டு. அப்படிப் பேசியபோது தான் ராட்சஸ குப்பன் என்னும் பெயர் வருவதற்குக் காரணமான எனது செயலையும் வெளியிட்டுவிட்டேன்.

மரகதம்:—ஆம்; எனக்கும் அந்தக் கதை தெரியும். ஆனால் இப்போது நான் கேட்பது அது அல்ல. கிருஷ்ணகிரியில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றியே கேட்கிறேன்.

மாகதம் கோரிக் கொண்டபடியே அவன் அச் சம்பவத்தைப்பற்றிய வரலாற்றைப் பின்வருமாறு கூறினான்:— என்னை அவ்வேலைக்கு அமர்த்திக் கொண்ட ராஜசேகரன் என்பவன் கிருஷ்ணகிரி ஜமீன்தாரரான சுந்தரம் பிரபுவின் சகோதரனுடைய புத்திரன். அவன் அதிக கடன் செய்து கொண்டுவிட்டதுடன், தனது பெரிய தந்தையாராகிய ஜமீன்தாரையும் வாயில் வந்தபடி யெல்லாம் தூஷித்ததால் அவர், அவன் தனக்கு வாரிசுதாரனாக இருக்கக்கூடாதென்னும் எண்ணத்துடன் தன் வயோதிக வயதில் இரண்டாவது விவாகம் செய்து கொண்டார். அந்த இரண்டாவது மனைவியின் மூலம் அவர் இரண்டு பெண்களையும் ஒரு குமாரனையும் பெற்றார். இதனால் ராஜசேகரனுக்குத் துக்கம் அதிகரித்து விட்டது. எப்படியாவது ஜமீன்தாரின் ஆண் குழந்தையைக் கொன்றுவிடுவது என்று முடிவு செய்துவிட்டான். அவன் நினைத்த காரியத்தை முடிப்பதற்கு நானே ஏற்றவன்

என்று எப்படியோ தெரிந்து கொண்டு என்னிடம் வந்தான். முதலில் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆயினும் அவன் பொருளாசை காண்பித்து என்னை மயக்கிவிட்டான். மேலும் என் மூலமாக ராஜசேகரனுக்குப் பிரபுப் பட்டமும், கிருஷ்ண கிரி ஜமீனும் கிடைத்துவிடுமாயின் எதிர்காலத்தில் என் வாழ்வும் சுகமாக இருக்கும் என்பதையும் எண்ணி ஒப்புக்கொண்டு விட்டேன். நாங்கள் ஏற்படுத்திய திட்டத்தின்படி நானும் என்னுடைய ஆட்கள் மூவரும் கிருஷ்ணகிரிக்குப்போய் அக் குழந்தையைக் களவாடி அதற்கு விஷமிட்டுக் கொன்று பகிரங்க ஸ்தாவில் பலரும் அறியும்படியான வகையில் பிரேதத்தைப் போட்டுவிடவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. ஏனெனின் அக் குழந்தை இறந்துவிட்டதென்று பகிரங்கமாக எல்லாருக்கும் தெரிந்தால்தான் ராஜசேகரன் கிருஷ்ண கிரி ஜமீன்தார் சுந்தரம் பிரபுவின் வாரிசுதாரனுக முடியும்.

அதன்படியே நாங்கள் கிருஷ்ணகிரிக்குச் சென்று சுந்தரம் பிரபுவின் குழந்தையை யாரேனும் தாதிமார் தனியாக வெளியே எடுத்து வருகிறார்களா என்று கவனித்துவந்தோம். இப்படி இரண்டு மூன்று நாள் கவனிப்பதற்குள் அங்குள்ள பலரும் எங்களைச் சந்தேகத்துடன் கவனித்தபடியால் எல்லாரும் ஒன்ருக இருக்கக்கூடாதென்று நான் நினைத்து என்னுடைய மனிதர்களைப் பக்கத்திலுள்ள ஒரு ஊரில் போய் எனக்காகக் காத்திருக்கும்படி சொல்லி யனுப்பிவிட்டேன். நான் தனியாக இருந்து கவனிக்க ஆரம்பித்ததும் எனது காரியம் சித்தியாகத் தொடங்கியது. அன்று மாலையே நான் குழந்தையை ஒரு தாதியின் வசத்திலிருந்து பறித்துக் கொண்டு போய்விட்டேன். நான் கருப்பு முகமூடியை அணிந்து கொண்டிருந்தபடியால் அந்தத் தாதி அதிகம் பயந்து மூர்ச்சை யடைந்துவிட்டாள். நான் அக் குழந்

தையை எடுத்துக் கொண்டு வெகு தூரத்திலிருந்த ஒரு தோட்டத்திற்குள் புகுந்து மேற்கொண்டு வேலையைச் செய்வதற்காக அங்கு உட்கார்ந்தேன். நான் அக் குழந்தையைக் கொன்றுவிட்டேன் என்று ருஜூப்பிக்கும் பொருட்டு அதன் மீதிருந்த சொக்காய்களை எடுத்துக் கொண்டேன். சொக்காய்களைக் கழற்றிய பிறகு பார்த்தால் அதற்கு ஒரு பெரிய சூரிய வடிவம் போன்ற மச்சம் இருப்பது தெரிந்தது. அது மிக அழகானதாகத் தோன்றியதால் அதையும் நன்கு கவனித்துப் பார்த்தேன். பிறகு அதைக் கொன்றுவிடுவதற்காக என் பையில் போட்டிருந்த விஷபுட்டியை எடுத்துப் பார்த்ததில் எப்படியோ அந்த புட்டி உடைந்துபோய் விஷமெல்லாம் கீழே கொட்டிவிட்டிருந்தது. பிறகு சிறிதுநேரம் என்ன செய்வதென்று யோசித்தேன். அக் குழந்தையோ ஓவென்று அழுது கொண்டிருந்தது. உடனே அதைக் கொன்றுவிட நினைத்து அதன் சொக்காயிலிருந்த சிறு நூல் கயிற்றையே அதன் கழுத்தில் கட்டி இழுத்துவிடுவதென நினைத்து அவ்வாறே செய்ய முயன்றபோது யாரோ மனிதர்கள் என்னை நோக்கி வரும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டேன். அவர்கள் யாரென்று தெரியாததால் ஒருகால் குழந்தையைத் தான் தேடிக்கொண்டு வருகிறார்களோ என்று நினைத்து அக் குழந்தையை அங்கேயே போட்டுவிட்டு ஓடிப்போய் விட்டேன்.

அப்படி நான் ஓடியபோது எதிரில் ஒரு காட்டுமிராண்டி கையில் பெரிய தடியுடன் வந்து, நான் அவனுடைய எதிரில் ஓடிவருவதைக் கண்டு என் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தான். நான் அதைப் பொறுக்க முடியாமல் அவனுக்குத் திருப்பி ஒரு உதை கொடுத்தேன். ஆனால் நான் உதைத்ததும் அவனைப்போன்ற காட்டுமிராண்டிகள் மூன்று நான்கு

பேர் அங்கு வந்துவிட்டார்கள். ஆதலின் அவர்களுடன் சண்டை போடுவது நல்ல மார்க்கமல்லவென்று உணர்ந்து ஓட்டம் பிடித்தேன். அவர்களும் தெய்வாதீனமாக என்னைத் தூரத்திக்கொண்டு வரவில்லை. ஆகவே நான் சௌகரியமாக அதிக தூரத்தில் சென்று நின்றேன். அங்குச் சென்றபின்னர் நான் மீண்டும் தோட்டத்துக்கே திரும்பிச்சென்று குழந்தையைக் கொண்டுவரலாமா என்று நினைத்தேன், எனெனின் நான் கேட்ட சத்தம் இக்காட்டுமிராண்டிகள் பேசியதாலேயே உண்டாயிருக்க வேண்டுமென்றும், குழந்தையைத் தேடிக் கொண்டு யாரும் வரவில்லையென்றும் உணர்ந்தேன். ஆனால் அந்தத் தோட்டத்திற்குள் செல்லவும் எனக்குப் பயமே. அக் காட்டுமிராண்டியை நான் உதைத்துவிட்டதால் அங்கு நான் சென்று அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டால் அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்பது நிச்சயம். ஆகவே குழந்தையின் கதி கடவுளின் இஷ்டப்படி ஆகட்டுமென்று விட்டுவிட்டு நான் அங்குத் திரும்பிச் செல்லவில்லை. எதேனும் கதையைக் கட்டி ராஜசேகரனிடம் சொல்லிவிடலாமென்றும் முடிவு செய்துவிட்டேன்.

ஆகவே நான் நேராக என் ஆட்கள் தங்கியிருந்த பக்கத்து ஊருக்குச் சென்று அவர்களைச் சந்தித்துத் தோட்டத்தில் நடந்த விஷயங்களைச் சொன்னேன். பிறகு நாங்கள் இரத்தினபுரிக்கு வெவ்வேறு மார்க்கமாக வந்து சேர்ந்தோம். ராஜசேகரனிடம் நான் அக் குழந்தையை விஷமிட்டுக் கொன்று அவன் தெரிவித்தபடியே ஒரு பகிரங்க ரஸ்தாவில் போட்டுவிட்டதாகவும் தெரிவித்து என்னிடமிருந்த அக் குழந்தையின் சொக்காயைக் காண்பித்து நான் சொன்னதை ருஜூப்பித்தேன். மேலும் அக்குழந்தையின் தேகத்தில் இருந்த மச்சத்தைப்பற்றியும் சொன்னேன். அந்தச் சொக்

காயின்மீது 'தினகரன்' என்று எழுதியிருந்தது. இதைக் கண்டு அவன் திருப்தியடைந்துவிட்டான்.

இவ்வாறு ஒரு மாதம் கழிந்தபிறகும் அக் குழந்தையைப் பற்றிய தகவல் ஒன்றும் தெரியாததால், அதை அந்தக்காட்டு மிராண்டிகளோ அல்லது வேறு யாரோ எடுத்துக்கொண்டு போயிருக்கவேண்டும் என்று நிச்சயித்துவிட்டேன். மேலும் என்னிடம் மீண்டும் தகவல் கேட்பதற்காக வந்த ராஜசேகரனும் அக் குழந்தை காணப்படவில்லை யென்றே தெரிவித்தான். மீண்டும் ஒரு மாதம் கழிந்தபின்னர் சுந்தரம் பிரபு அதிக காயலாவாய்ப் படுக்கையில் படுத்திருக்கிறுர் என்று கேள்விப்பட்டதால் அதைப்பற்றி விசாரிக்கலாமென்று ராஜசேகரனுடைய இருப்பிடத்துக்குச் சென்றேன். ஆனால் அவன் அதற்கு முன்னுளே இச்செய்தியைக் கேள்விப்பட்டு கிருஷ்ணகிரிக்குப் போய்விட்டதாகத் தெரிந்துகொண்டேன். ஆதலின் நானும் என் ஆட்களுடன் அங்கே போனால், அந்தக் காயலாவினால் அக் கிழவன் இறக்கவில்லை யென்றாலும் எப்படியேனும் ஒரு இரவில் நாங்கள் அவன் படுத்திருக்கும் அறையில் நுழைந்து அவன் தலையில் தடியாலடித்துக் கொன்றுவிடலாமென்று தீர்மானித்தேன். அவ்வகையிலேனும் ராஜசேகரனுக்கு உதவிசெய்யலாமென்று நாங்கள் கிருஷ்ணகிரிக்குச் சென்றோம். ஆனால் அங்குச் சென்றதும் அப்பிரபு இறந்துவிட்டதாகவும், அப்பிரபுவின் குழந்தை அகப்பட்டதாகவும், ராஜசேகரன் வந்த அன்றிரவே திரும்பிப் போய்விட்டானென்றும் கேள்விப்பட்டோம்.

குழந்தை மீண்டும் அகப்பட்டதென்பதில் எனக்கு எத்தகைய ஆச்சர்யமும் ஏற்படவில்லை. ஏனெனின் அது இறக்கவில்லை யென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியுமல்லவா? ஆனால் ராஜசேகரன் அன்றிரவே திரும்பிப் போய்விட்டான்

என்பதுமட்டும் எனக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. எனினும் நாங்கள் மேற்கொண்டு என்னசெய்வதென்று யோசித்ததில் கூடுமானல் சுந்தரவிலாச மாளிகையில் புகுந்து ஏதேனும் அகப்படுவதை அடித்துக்கொண்டுபோவதென்று துணிந்து உள்ளே புகுந்தோம். ஆனல் எங்களைப் பார்த்துவிட்ட யாரோ கூச்சல் போட்டதால் ஒளித்துக்கொள்ளும்பொருட்டு அங்குமிங்கும் ஓடுகையில் அங்கு பூமிக்குள் அறை செல்வதைக் கண்டு அதில் நுழைந்து பார்த்ததில் அங்கு ஒரு பெரிய குளம் இருந்ததையும், அதில் இராஜசேகரன் பிணமாய் மிதப்பதையும் கண்டு ஆச்சர்யமடைந்தோம்!

ராட்சஸ குப்பன் இதைச் சொல்லி நிறுத்தியதும் இவ் விவரத்தை மிக ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்த மரகதம், 'அப்படியானல் அவனை யாரேனும் கொலை செய்துவிட்டார்களா?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

அதற்கு அவன் பதில் அளிக்கையில் மேலும் கூறியதாவது:—இல்லை. அவன் கொலை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு அப்பிரேதத்தைச் சோதனை செய்த டாக்டரும் அவன் கொலை செய்யப்படவில்லை யென்றே கூறினர். அவன் தவறுதலாக அக் குளத்தில் விழுந்து மூழ்கி இறந்திருக்கவேண்டும். அவன் எப்படி அந்த இடத்துக்குப் போனன் என்பதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது. நானும் எனது ஆட்களும் சேர்ந்து ராஜசேகரன் மீதிருந்த நகைகளையும், அவனிடமிருந்த பணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு பக்கத்திலிருந்த ஊருக்குப் போய்விட்டோம். அங்கே போய்ப் பிரேதங்களை அபகரித்துச் சென்று டாக்டர்களுக்குக் கிரயத்துக்குக் கொடுத்துவிடும் தொழிலில் ஈடுபட்டிருந்த மாயவன் என்பவனைத் தேடிக் கண்டுபிடித்து அவனிடம் ராஜசேகானுடைய பிரேதம் இருப்பதைத் தெரிவித்

தோம். அவனும் இரத்தினபுரியிலிருந்து அங்கு வந்து தங்கியிருந்த ஒரு டாக்டரிடம் சென்று பேரம் பேசி முடித்தபின்னர், அனைவருமாகச் சேர்ந்து கிருஷ்ணகிரிக்குச் சென்றோம். மெதுவாக சுந்தரவிலாச மாளிகையில் புகுந்து அப் பிரேதத்தை எடுத்துச் சென்றோம். நீ கிருஷ்ணகிரியையும் சுந்தரவிலாச மாளிகையையும் பார்த்திருக்கிறாயா?

மரகதம் :—இல்லை. நான் பார்த்ததில்லை. அதைப் பார்க்கவேண்டிய சந்தர்ப்பம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை.

குப்பன்:—சுந்தரவிலாச மாளிகை என்பது அதியற்புதமான பெரியதொரு கட்டடம். அக்காலத்தில் அக்கட்டடத்தில் பாதி மூடப்பட்டுக் கிடந்தது. இப்போதைய அதன் நிலைமையைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. அப்போது நாங்கள் மிகச் சாமர்த்தியமாக யாருக்கும் தெரியாதபடி ராஜசேகரனுடைய பிரேதத்தை எடுத்துச் சென்று பக்கத்துத் தோட்டத்தில் மாயவன் கொண்டுவந்திருந்த வண்டியில் போட்டுவிட்டோம். வண்டி மிக வேகமாக ஓடத் தொடங்கியது. நாங்கள் பின்னால் நடந்து சென்றோம். டாக்டர் குணசிங்கம் தான் ஒப்புக்கொண்டபடி பணத்தைக் கொடுத்துவிட்டார். அதை நாங்களனைவரும் பங்கிட்டுக்கொண்டதில் ஒவ்வொருவருக்கும் சராசரியில் எட்டு பவுன் வீதம் கிடைத்தது. பிறகு நானும் எனது ஆட்களும் இரத்தினபுரிக்குத் திரும்பி வந்து ராஜசேகரன் பிரேதத்தின்மீதிருந்து நாங்கள் கைப்பற்றிய நகைகளை நமது கோபாலன் தம்பதிகளுக்கு விற்றுவிட்டோம். ஆகவே இவைகளையெல்லாம் கவனிக்கும்போது நாங்கள் கிருஷ்ணகிரியிலிருந்து வெறுங்கையுடன் திரும்பவில்லை யென்று ஆறுதலடைந்தோம்.

இவ்வாறு சொல்லி முடித்ததைக் கேட்ட மாகதம், 'இது விஷயமாய் இவ்வளவுதான் எனக்கு நீ தெரிவிக்க வேண்டியதோ?' என்று கேட்டாள்.

குப்பன்:—இவ்வளவுதான். இதைத்தான் எவ்வளவோ விவரமாகக் கூறியிருக்கிறேன். ஏன்? நான் கூறியதெல்லாம் திடுக்கிடக்கூடிய சம்பவங்களாக இல்லையா? ஆனால் இப்போது டாக்டர் குணசிங்கம், நற்குணத்தில் சிங்கமாகவே மாறிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். மாயவனும் வயோதிக பருவத்தை யடைந்துவிட்டபடியால் இப்போது அத்தொழிலில் இறங்குவதில்லை. ஆனால் அவன் வேறு வியாபாரத்தில் இறங்கி இருக்கிறான். நான் போதுமான அளவு பிராந்தியையும், விஸ்கியையும் குடித்தாய்விட்டது. இனி நான் போகிறேன். நாளை இரவு நடுக்குப்பத்தில் பணத்துடன் என்னைச் சந்திக்கத் தவறமாட்டாய் என்று நம்புகிறேன். இவ்வாறு செய்ய நீ தவறினால் பிறகு நம்முடைய சினேகம் அற்றுப்போய்விடுமென்பது நிச்சயம்.

மரகதம்:—நான் எப்போதும் என்னுடைய வாக்குறுதியினின்றும் தவறியதில்லை என்பது உனக்குத் தெரிந்தது தானே.

குப்பன்:—ஆம், நான் உன் விஷயத்தில் சந்தேகித்ததில்லை. நான் போய்வரட்டுமா?

மாகதம் அவனை அனுப்பிவிட்டாள். அவனும் நடுக்குப்பம் போய்ச் சேர்ந்தான்.

## 14-வது அத்தியாயம்

——:o:——

### அதே இரவில் மற்றொரு சம்பவம்

தினகரன், தோட்டத்தின் மத்தியிலிருந்த அந்த விடுதியிலிருந்து நடு ராத்திரியில் புறப்பட்டுச் சென்றபின்னர் அவனுக்கு நிகழ்ந்ததை இப்போது கவனிப்போம். அவன் மெதுவாக வயல்களை யெல்லாம் கடந்து அவற்றிற்கு அப்பாலிருந்த பகிரங்க ரஸ்தாவுக்கு வந்து சேர்ந்தான். அது சத்திரத்துக்கும் ஜனங்கள் வசிக்கும் வீடுகளுக்கும் சமீபத்தில் இருந்ததால் அவன் தனியாக இருக்கிறோமே என்று அச்சப்படவேண்டிய அவசியமில்லாமல் இருந்தது. ஆகவே அவன் சத்திரத்துக்குச் சென்று கதவைத் தட்டி ஆட்களை எழுப்பிப் படுக்கையை வாங்கிக்கொண்டு படுத்து அந்த இரவின் மீதி பாகத்தையும் கழிக்கலாம் என்று சிந்தித்தான். ஆனால் சொற்ப தூரம் நடந்ததும், சத்திரத்துக்குப் போகலாமா அல்லது எப்படியாவது சமாளித்துக்கொண்டு இரத்தினபுரிக்கே போய்விடலாமா என்று யோசிக்க ஆரம்பித்தான். இதற்குள் இரத்தினபுரியிலிருந்து யாரோ ஒருவர் ஒரு குதிரையின்மீது சவாரி செய்துகொண்டுவரும் சப்தம் கேட்டது. சிறிது நேரத்திற்குள் தினகரன் நடந்துகொண்டிருந்த இடத்துக்கே அக் குதிரை வந்ததும், வேகமாக ஓடி வந்த அக்குதிரை திடீரென்று அந்த இடத்தில் நிறுத்தப்பட்டது.

அன்றிரவு சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தானென்றும், இரவு முழுதும் பகல்போலவே வெளிச்சமாக இருந்ததென்றும் நேயர்கள் முன்னமே படித்தது ஞாபகமிருக்க

லாம். அதனால் அக் குதிரையின்மீது வந்த அம்மனிதன் அழகான உடைகளை யணிந்த ஒரு இளைஞன் என்பதைத் தின கரன் அறிந்துகொண்டான். ஆனால் அவன் கண்கள்மட் டும் தெரியும்படி தலைமீதிருந்து முக்காடிட்டுக்கொண்டிருந்த தால் அவனது முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவன் ஏறிவந்த குதிரை மிக்க உயரமானதும் நல்ல ஜாதியைச் சேர்ந் ததுமாகும். அது தன்னுடைய எஜமானுக்கு அடங்கி நடக் கக்கூடியதாகவே இருந்ததென்றாலும், அதி வேகமாய் ஓடிக் கொண்டிருந்தபோது திடீரென்று நிறுத்தப்பட்டதால் அது வும் பொறுமையை இழந்ததுபோலவே மீண்டும் ஓடுவதற்கு விரும்புவதுபோல் கால்களை முன்னுக்கும் பின்னுக்குமாக வைத்துக்கொண்டிருந்தது.

அப்போது குதிரைமீதுவந்த அம்மனிதன் நமது தின கரனைப் பார்த்து, 'ஐயா! நீங்கள் இன்றிரவு அதிக நேரத் துக்கு மேல் வெளியே வந்திருக்கிறீர்களே' என்று அடக்கத்துடனும் விசுவாசமுள்ளவன் போலவும் மெதுவா கக் கேட்டான். அதைக் கேட்ட தினகரன் தான் பயந்து கொண்டிருந்த நிலைமையில், யாரேனும் ஒருவர் துணை அகப் படுவாரா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, அவன் சந்தித்துப் பேசியதால் தைரியமடைந்தவ னாய், 'ஆம்; நான் அதிக நேரத்துக்குப் பின்னர்தான் வெளியே வந்திருக்கிறேன். ஆனால் நீங்களும் இவ்வாறே செய்திருப்பதாக நானும் கூற இடமிருக்கிறதல்லவா? நாம் இருவருமே அதிக நேரத்துக்குப் பின்னர்தான் வெளியில் வந்திருக்கிறோம். இப்போது பன்னிரண்டு மணிக்கு மேல் இருக்கும்' என்றான்.

குதிரைமீது வந்த மனிதன் தினகரனைப் பார்த்து, 'நீங் கள் எந்த வழியாகப் போகவேண்டும்?' என்று கேட்டான்.

அதற்கு தினகரன் சிரித்துக்கொண்டே, 'உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டுமானால் எனக்கு வழி தவறிவிட்டது. அதோ இருக்கும் சத்திரத்திற்குப் போய் அங்குள்ளவர்களைத் தட்டி எழுப்பிப் படுத்துக் கொள்ளலாமென்று யோசித்திருக்கிறேன். இதற்குள் நீங்கள் வந்துவிட்டீர்கள்' என்று கூறினான். அதற்கு அவன், 'ஓகோ! அது முடியாது. இந்நேரத்தில் நீங்கள் சத்திரத்திற்குப் போய்க் கதவைத் தட்டினால் யாரும் கதவைத் திறக்கமாட்டார்கள். ஆனால் இதோ சமீபத்தில் இங்கிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் என் விடுதியொன்று இருக்கிறது. நீங்கள் இஷ்டப்பட்டால் அங்கு ஒரு படுக்கையைத் தயாரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்' என்று அன்புடன் கூறினான்.

பெருந்தன்மையுடன் கூடிய அவன் அன்புடன் அளிக்க முன் வந்த உபகாரத்தை மறுக்க முடியாமல் தினகரனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டான். அதன்மீது அவன் 'ஐயா, நீங்கள் எனக்குப் பின்னால் குதிரையின்மீது ஏறிக்கொண்டால் கூடிய விரைவில் நாம் நமது இடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். இதற்கிடையில் நான் யார் என்பதை உங்களிடம் தெரிவிக்க வேண்டுமல்லவா? நமது இரத்தினபுரி அரசாங்கத்தைச் சேர்ந்த சேனையில் நான் காப்டனாக இருக்கிறேன். ஆனால் இப்போது அந்த சேனையைக் கலைத்திருக்கிறார்கள். எனது பெயர் அர்ஜுனசிங்' என்று தெரிவித்துக் கொண்டான். அப்போது தினகரன், 'அன்பரே! இப்போது நாம் ஒருவரை யொருவர் சந்தித்திருக்கும் சந்தர்ப்பத்தையும், உங்களுடைய அன்பு, அனுதாபம், பெருந்தன்மை முதலிய குணங்களையும் கவனிக்கையில் நம்முடைய சிநேகம் நாளுக்கு நாள் அபிவிருத்தி யடையுமென்றே நம்ப இடமிருக்கிறது. நான் கிருஷ்ணகிரி ஜமீன்தாரின் ஏகபுத்திரன். உங்

களை என்னுடைய அரண்மனையில் வரவேற்க மிக்க ஆவலுடையவனாக இருக்கிறேன்,' என்று சொன்னான். உடனே அர்ஜுன சிங், 'ஓகோ நான் உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களைப் போன்ற பிரபுவுடன் சினேகம் செய்து கொள்வதில் அனைவருமே பெருமை கொள்வார்களாதலால் நானும் பெருமை கொள்கிறேன். இதோ என் கையைப் பிடித்துக் கொண்டு குதிரையின் மீது ஏறி என் பின்னால் உட்கார்ந்து கொள்ளுங்கள்' என்று மிக்க ஆர்வத்துடன் கூறினான்.

தினகரனும் அர்ஜுன சிங்கின் இஷ்டப்படியே குதிரையின்மீது ஏறி அவனுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டான். தான் விழுந்துவிடாமலிருக்கும் பொருட்டு சிங்கின் உடம்பைச் சுற்றிலும் தன் கைகளைப்போட்டு அவனை அணைத்துக் கொண்டவன்போல் அமர்ந்தான். உடனே அர்ஜுன சிங்கும் தன் காலால் குதிரையின் வயிற்றில் உதைக்கவே அது வாயுவேக மனோவேகமாக ஓடத் தொடங்கியது. குதிரை சிறிது தூரம் சென்றதும் எதிரில் எதையோ கண்டு மிரண்டுவிட்டதுபோல் முன்னும் பின்னுமாக ஓடி இடக்கு செய்ததால் அதைக் கண்டு பயந்த தினகரன் இன்னும் அதிகமான உறுதியுடன் தன் நண்பனைத் தழுவ முயன்றபோது அவனுடைய மார்பில் ஸ்தனங்கள் இருப்பதை தினகரன் உணர்ந்தான். ஆகவே ஆண்வேடம் தரித்த யாரோ ஒரு மாதே தன்முன் உட்கார்ந்திருப்பதாக நினைத்து இது என்ன மர்மமோ என்று ஆச்சர்யப்பட்டான். ஆயினும் ஒன்றும் கேட்க முடியாமல் இன்னும் என்ன நடக்கிறதெனப் பார்ப்போமென்று சும்மா இருந்துவிட்டான். சிறிது தூரம் சென்றதும் தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் எப்படியாவது

தன் நண்பனைக் கேட்டுவிடுவதென்று நினைத்துக் கொண்டிருந்தபோது காப்டன் அர்ஜுனசிங் திடீரென்று எதிர்பாராத வகையில் பின்னால் இருந்த தினகரனைத் தன் கரத்தால் பற்றிக் கீழே தள்ளினான். தினகரனும் எதிர்பாராமல் நேர்ந்த சம்பவத்தால் இன்னும் என்ன நேருமோ என்று அச்சங் கொண்டு, மெய் நடுங்கக் கீழே நின்றான்.

அப்போது காப்டன் தன் கையில் கைத்துப்பாக்கியை ஏந்தி, 'பிரபுவே! உன்னுடைய நகைகள், பணப்பை, கையிலிருக்கும் மோதிரம் ஆகிய எல்லாவற்றையும் கீழே வை' என்று அதிகார தோரணையில் அதட்டிக் கூறினான். நமது தினகரனோ வயதில் இளையவனாயினும், மற்ற இளைஞர்களைப் போல் தைரியம், ஆண்மை, எதையும் சமாளிக்கும் தன்மை முதலிய இளம் வயதுக்கான குணங்கள் எதுவுமில்லாதவன். கைத்துப்பாக்கியைக் கண்ட மாத்திரத்தில் அவன் மனம் குழப்பமடைந்துவிட்டது. மூளை கலங்கிவிட்டது. நான்கு பக்கங்களிலும் பார்த்தான். எங்கேனும் ஓடிப்போகவும் வழியில்லை. உதவிக்கு யாரேனும் வருவதாகவும் தெரியவில்லை.

தினகரனுடைய திக்கற்ற நிலைமையைக் கண்ட அர்ஜுனசிங் என்று சொல்லிக்கொண்ட அந்த ஆள், 'எல்லாவற்றையும் கீழே வை. வீண் காலதாமதம் செய்யவேண்டாம். உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்னும் ஆவல் உனக்கு இருந்தால் உடனே நான் கேட்ட எல்லாவற்றையும் கீழே வைத்துவிட்டு மறு வேலையைப் பார்' என்று அவசரப்படுத்தினான்.

ஒருகால் பரிகாசமாக அந்த ஆண்வேடம் தரித்த பெண் இவ்வாறு செய்கிறாளோ என்று சந்தேகங்கொண்டு தினகரன் 'நீங்கள் ஏதோ பரிகாசம் செய்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

நீங்கள் யாராயினும், நீங்கள் முன்பின் தெரியாதவராயிருந்தும் இவ்வாறு பரிகாசம் செய்வதை நான் வரவேற்கிறேன்' என்றான். அதற்கு அர்ஜுனசிங், 'இவ்வாறு பேசிக் காலதாமதம் செய்தால் இது பரிகாசமல்ல என்பதை உனக்கு உணர்த்திவிடுவேன். பிரபுவே! உடனே பணப்பையையும் மற்றவைகளையும் கீழே வை' என்று அதட்டிப் பேசினான்.

தன் எதிரில் நிற்கும் ஆள் யாராயினும் அவர் உண்மையிலேயே தன்னிடமிருந்து கொள்ளையடிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் இருப்பதையும் தினகரன் உணர்ந்து தன் பணப்பையையும், கடிகாரத்தையும், சங்கிலியையும், மோதிரங்களையும் எடுத்துக் கீழேவைத்தான். உடனே காப்டன் என்று பொய்யாகச் சொல்லிக் கொண்ட அம்மாது, 'உன்னுடைய பொத்தான்களும் மிக விலை உயர்ந்ததாகவே இருக்கின்றன. ஆயினும் அவற்றை நீயே வைத்துக்கொள். ஏனெனின், உன்னிடமிருந்து எல்லாவற்றையும் கைப்பற்றிவிட எனக்கும் இஷ்டமில்லை. ஆனால் இப்போது நீ பறிகொடுத்ததை வெளியில் எங்கும் சொல்லக்கூடாதென்று கட்டளையிடுகிறேன். ஒரு மாதினால் கொள்ளை யடிக்கப்பட்டதாகச் சொல்வது உனக்கே வெட்கத்தைத் தருமல்லவா?' என்று கூறினாள்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவள் தன் காலால் அக்குதிரையின் வயிற்றில் உதைத்ததும் குதிரை வேகமாக ஓடியது. சிறிது நேரத்துக்குள் தினகரனிடமிருந்து சாமான்களைக் கொள்ளையடித்த அம்மாது மறைந்துவிட்டாள். தினகரனோ அவமானத்தாலும், பீதியாலும், என்ன செய்வதென்று தோன்றாமையாலும் திக்பிரமை கொண்டவன் போல் நின்ற இடத்திலேயே சில நிமிஷங்கள்வரை அசையாமல் நின்றிருந்தான். அவன் மனோ தைரியமற்றவனாதலின் அழத் தொடங்கிவிட்டான். இரத்தினபுரிக்கு வெகு தூரத்

தில் நடுநிசியில் கையில் பைசாவும் இல்லாதவனாய், ஒரே இரவில் அவனுக்கு ஏற்பட்ட பல பயங்கர சம்பவங்களால் மனக்குழப்ப மடைந்தவனாய் இருந்தான். அந்நேரத்தில் அவ்வளவு தூரம் நடப்பதென்பதும் அவனால் சாத்தியமாகக்கூடிய வேலையாகத் தோன்றவில்லை. முதலில் பாதி தூக்கத்தில் எழுந்து ஓடவேண்டியதாயிற்று. சிறிது தூரம் சென்ற பின்னர் கேவலம் ஆண் வேடம் தரித்த ஒரு பெண் தன்னிடமிருந்து சாமான்களைக் கொள்ளையடிக்க நேர்ந்தது. அவனது மனதைக் கவலையில் ஆழ்த்த இச் சம்பவங்கள் போதாதோ?

பாவம்! தினகரன் தனக்கு நேர்ந்த ஆபத்தை யாரிடமும் சொல்லிக் கொள்ளவும் முடியாமல் இருந்தது. கேவலம் ஒரு பெண் தன்னிடமிருந்ததைக் கொள்ளையடித்தாளென்று சொல்லிக்கொள்வது அவமானமல்லவா? ஆகவே எப்படியாவது இரத்தினபுரிக்குச் சென்று தன் வீட்டை அடைவதே நலமெனக் கருதினான். பிறகு நகரம் நோக்கிப் புறப்பட்டான். வழியில் முதலில் சத்திரம் வந்தது. தன்னிடம் ஒரு பைசாவும் இல்லாததால் அங்குச் செல்வதில் பிரயோசனப் படாதென்று தெரிந்து நேரே சென்றான். இன்னும் சிறிது தூரம் சென்றதும், நடினமாது ராஜலட்சுமி வசிப்பதாக அவன் நினைத்த மாளிகை வந்தது. பலவிதமாகக் குழப்பமடைந்திருந்த தினகரன் திடீரென்று அம்மாளிகையின் முன்பு நின்று, 'ஓகோ! இதில் வசிக்கும் இந்த நடினமாதைப் பெற வேண்டுமென்று ஆசைப்பட்டதற்காகத் தானே இவ்வளவு கஷ்டங்கள் சம்பவித்தன. வேண்டாம், இப்படிப்பட்ட துர திர்ஷ்டத்தைக் கொடுக்கும் இவள் வேண்டாம். இவளைப் பெறுதபோதே இவ்வளவு கஷ்டங்கள் சம்பவிக்கிறதென்றால் பெற்றுவிட்டால் இன்னும் எவ்வளவு அபாயங்கள் ஏற்படுமோ? ஆகவே இவளைப் பெறும் முயற்சியை இத்துடன் விட்டுவிட வேண்டியதுதான்' என்று பலவாறு சிந்தித்தான்.

ஆனால் அவன் அவ்வாறு சிந்தித்துக் கொண்டே நின்றிருந்தபோது எதிரிலிருந்த அம்மாளிகையின் கீழ்க்கட்டில் ஒரு அறையில் சிறு விளக்கு எரிவது அவனுக்குத் தோட்டத்திலிருந்த மரங்களின் சந்திலிருந்து தெரிந்தது. அப்போது மணி என்ன இருக்குமென்று தெரிந்து கொள்ள அவனிடம் கடிகாரமில்லை யென்றாலும் அச்சமயம் சுமார் இரண்டு மணி இருக்குமென்று அவன் யூகித்தான். அந்த விளக்கின் ஒளி அவனுக்குத் தெரிந்ததால் சற்று முன் அவன் செய்துகொண்ட வைராக்கியத்தினின்றும் அவனது புத்தி சிறிது தடுமாறியது. 'ஓ! இன்று திங்கட்கிழமை தானே. இன்று ராஜலட்சுமி நடிப்பாளென்று பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்படவில்லையே. ஆதலின் இங்குள்ளவர்கள் இந்நேரத்தில் அவளுக்காகக் காத்திருப்பார்களென்று நினைக்க இடமில்லை. மேலும் அவள் ஆட்டத்துக்குச் சென்றிருந்ததாகவே வைத்துக் கொண்டாலும் இன்னுமா வராமலிருப்பாள். ஒருகால் ஆட்டம் முடிந்த பிறகு வேறு எங்கேனும் போயிருக்கலா மல்லவா?' என்று பலவாறு அவளைப்பற்றிச் சிந்திக்கவே மீண்டும் அவன் அவளிடம் கொண்டிருந்த ஆவல் மூண்டெரியத் தொடங்கிற்று.

அவன் இவ்வாறெல்லாம் பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று அம்மாளிகையின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. அப்போது மரங்களின் சந்தின் வழியே இன்னும் அதிகமான பிரகாசம் காணப்பட்டது. ஆகவே அவன் மாளிகையின் வாயிலை நோக்கிச் சென்றதில், ஒரு மாது வாயிற்படியின் வழியே கீழே இறங்கி வருவதைக் கண்டான். அவள் அம் மாளிகையில் வேலை செய்பவளாயிருக்க வேண்டுமென்றும், ஆனால் சிறிது உயர்ந்த அந்தஸ்திலேயே இருக்க வேண்டுமென்றும், இளம் வயதின

ளாயும், அழகிய உடைகளை அணிந்தவளாயும் இருக்க வேண்டுமென்றும் அவனுக்குத் தெரிந்தது. ஆகவே அவன் தோட்ட மத்ய விடுதியில் இருந்த அம்மாது செய்யத் தவறிய காரியத்தைத் தானே செய்து கொள்வதற்கு ஒரு சமயம் கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷமடைந்தான். அப் பெண்ணும் வாயிலுக் கருகில் வந்து யாரோ வருவதை ஆவலுடன் எதிர்பார்ப்பவள்போல் நின்றாள். அப்போது அவன் அவளைப் பார்த்து, 'பெண்மணியே! இவ்வளவு நேரத்துக்குப்பின் நீ இங்கு உலாவுவதன் விசேஷமென்ன' என்று கேட்டான்.

அவள் முதலில் யாரோ என்று நினைத்து பயந்துவிட்டாளென்றாலும் பிறகு நிதானமாகக் கவனித்ததில் அவன் ஒரு பெரிய மனிதனாக இருக்க வேண்டுமென்பதை அவனுடைய உடையால் தெரிந்துகொண்டு அவனுடன் வம்பு பேசவேண்டுமென்னும் ஆவலுடையவளேபோல் அவனது அருகில் நெருங்கிச் சென்று, 'என்ன சொன்னீர்' என்று கேட்டாள். அதற்கு அவன், 'நீ இவ்வளவு நேரத்துக்குப் பிறகு இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டான். அதற்கு அவள் புன்சிரிப்புடன் அவனுடன் வேடிக்கையாகச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்க விரும்புபவள்போல், நீங்கள் இவ்வாறு கேட்பதைக்காண நான் ஆச்சர்யப்படுகிறேன். நீங்கள் இவ்வளவு நேரத்துக்குப் பின்னர் இங்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால் அது சரியான கேள்வியாகாதோ?' என்று கேட்டாள்.

தினகரன்:—இதோ சமீபத்தில் இருக்கிற சத்திரத்தில் நான் மற்றும் சில நண்பர்களுடன் விருந்து சாப்பிட்டேன். நாங்கள் அளவுகடந்த வொயினைக் குடித்துவிட்டோம். பிறகு நாங்கள் சூதாட்டம் ஆடினோம். அப்போது நான் என்னிடமிருந்த பணத்தையெல்லாம் தோற்றுவிட்டேன். இல்லா

விட்டால் இப்போது உன்னிடம் பத்து பவுன் நோட் ஒன்றைக் கொடுத்து இனி நீ எனக்குச் செய்யவேண்டிய ஒரு முக்கிய வேலைக்காகச் சன்மானமாக வைத்துக் கொள்ளும்படி சொல்லியிருப்பேன்.

அப்பெண்:—வாஸ்தவந்தான். நீங்கள் இவ்வாறு என்னுடன் பேசும்போதே மிதமிஞ்சிக் குடித்துவிட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. என்ன காரியத்தில் நான் ஈடுபடவேண்டும் என்பதைச் சிறிதும் சங்கோசமின்றி என்னிடம் கூறலாம்.

தினகரன்:—நான் உண்மையையே பேசுகிறேன். நான் இப்போது உன்னிடம் கூறியபடி சூதாட்டத்தில் என்னிடமிருந்த பணத்தை யெல்லாம் தோற்றுப்போனேனென்றும் நாளை மாலை நான் மீண்டும் இங்கு வரும்போது உனக்கு இருபது பவுன் நோட்டைத் தருவேன் என்பது நிச்சயம்.

அப்பெண்:—மிகவும் சந்தோஷம். ஆனால் இப்படி பேசிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம்? நாம் காரியத்தில் இறங்கிவிடுவோம். நீங்கள் யார்? நீங்கள் இவ்வளவு தாராளமாகச் சன்மானம் செய்வதாகச் சொல்வதைப் பார்த்தால் நீங்கள் யாரோ பெரிய பணக்காரராக இருக்க வேண்டுமென்று தெரிகிறது.

அப்போது தினகரம் பிரபு தன் சட்டைப் பையிலிருந்து தான் இன்னாரென அச்சடிக்கப்பட்டிருந்த துண்டுக் கார்டை அவளிடம் நீட்டினான். அதில் 'கிருஷ்ணகிரி மைனர் ஜமீன்தார் தினகரம் பிரபு' என்று அச்சடிக்கப்பட்டிருந்தது. நிலா வெளிச்சம் பிரகாசமாயிருந்தபடியால் அவள் அத் துண்டுக் கார்டில் இருந்ததைப் படித்துத் தெரிந்து கொண்டாள். அவன் ஒரு பிரபு என்று தெரிந்து கொண்டதும், சிறிது

மரியாதையான தோரணையில், 'எனது பிரபுவே! நீங்கள் ஏதோ காரியமென்று பிரஸ்தாபித்தது வாஸ்தவமான தென்றே இப்போதுதான் உணர ஆரம்பித்திருக்கிறேன். உங்களைப்போன்ற கனவான்கள் தாங்கள் செய்யும் வாக் குறுதியினின்றும் தவறமாட்டார்கள் என்பதை நான் அறி வேன். அதிலும் கிருஷ்ணகிரி மைனர் ஜமீன்தாராகிய நீங் கள் எக்காலத்தும் வாக்குத் தவறமாட்டீர் என்பதில் எனக் குச் சிறிதும் சந்தேகமில்லை.

தினகரன்:—நீ யாருக்காக இந்நேரத்தில் காத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை முதலில் தெரிவி.

அப்பெண்:—என் எஜமானிக்காகக் காத்திருக்கிறேன். அவளை நான் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்கிறேன். நான் அதிக நேரமாகவே காத்திருப்பதால் சலிப்படைந்து போய் வெளியில் வந்தேனும் பார்த்தால் வண்டியின் சத்தம் கேட்கிறதோ என அறியலாம் என்று இங்கே வந்தேன். அந்த சத்தம் கேட்டால் நீங்கள் உடனே இவ்விடமிருந்து விலகிச் செல்ல வேண்டியதுதான்.

தினகரன்:—ஏன்? நாம் இருவரும் பேசுவதைக் கண் டால் உன் எஜமானி உன்னைத் திட்டுவாளோ?

அப்பெண்:—இல்லை. என் எஜமானி தாராள புத்தியுடை யவளாதலால் அவள் ஒன்றும் சொல்லமாட்டாள். ஆயினும் அவள் வீட்டுக்கு வரும்போது தனியாக வரமாட்டாள். அவ ளுடன் வேறு யாரேனும் வந்தால் அவர், நான் இங்கு அவ ளைத் தவிர வேறு ஒரு ஆடவனுடன் பேசுவதைக் கண்டு கோபிப்பார்.

தினகரன்:—நீ சொல்லுவதில் ஏதோ விசேஷமிருப்பது போலத் தெரிகிறது. உன் எஜமானியுடன் யார் வருவார். அவரைத் தவிர வேறு யாரும் இங்கு வரக்கூடாதா?

அப்பெண்:—நீங்கள் அந்நியர். ஆகவே உங்களிடம் என் எஜமானியின் சமாசாரத்தைப்பற்றி யெல்லாம் தெரிவிக்க நான் இஷ்டப்படவில்லை.

தினகரன்:—உன் எஜமானி நாடக மேடையில் நடிப்பவள்தானே. நீ ஏன் விஷயங்களை மறைக்க வேண்டும்.

அப்பெண்:—ஓஹோ! நீங்கள் என் எஜமானியைப்பற்றி ஏதோ தெரிந்து கொண்டிருக்கிறீர்போலத் தெரிகிறதே. நீங்கள் மனதில் ஏதோ எண்ணம் வைத்திருப்பதாகவும் அதில் என் உதவி அவசியமாய் இருக்கிறதென்றும் சொன்னீர்களே; அதென்ன விஷயம். உண்மையையே சொன்னீர்களா? அல்லது வேடிக்கையாகச் சொன்னீர்களா?

தினகரன்:—உண்மையையே சொன்னேன். அக் காரியத்தில் நீ உதவி செய்வதற்காகவே உனக்குச் சன்மானம் அளிப்பதாகச் சொன்னேன். ஆனால் நான் சூதாட்டத்தில் என் பணத்தை யெல்லாம் இழந்துவிட்டதால் இப்போதே உனக்கு ஏதேனும் பணம் கொடுக்க முடியாததற்காக வருந்துகிறேன்.

அப்பெண்:—பிரபுவே பாதகமில்லை. உங்கள் வார்த்தையையே ஒரு பெரிய பத்திரமாகக் கொள்ளுகிறேன். ஆகவே நீங்கள் இப்போதே பணத்தைக் கொடுத்துவிட்டு அதை நான் என்னிடம் வைத்துக் கொண்டிருப்பவள்போல் நினைத்து நீங்கள் சொல்லும் விஷயத்தைக் கேட்கத் தயாராகயிருக்கிறேன். ஆதலின் உங்கள் மனதில் உள்ளதைத் தெரிவித்துவிடுங்கள்.

தினகரன்:—உன்னுடைய எஜமானியை நான் நாடக மேடையில் கண்டிருக்கிறேன். அவளது ஆற்றலையும் அழகையும் கண்டு பிரமித்துப்போனதும் உண்டு. அவளை எப்படியாவது நான் பெற்று அனுபவிக்க வேண்டும் என்னும்

ஆவல் அதிகமாக இருக்கிறது. எனது எண்ணம் கைகூடும் வகையில் நம்பிக்கைக்கு ஏதேனும் வழி இருக்கிறதா?

அப்பெண்:—ஏன்? வழி இல்லாமல் என்ன? நீங்கள் அவளுடன் பேசி முடிக்கும் ஒப்பந்தத்தைப் பொருத்ததாகவே எல்லாம் இருக்கும். நீங்கள் தாராளமாகப் பணம் செலவழிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

தினகரன்:—அப்படியானால் உன் எஜமானி பணப்பித்து பிடித்தவளோ? பண ஆசை அதிகம்போல் இருக்கிறது.

அப்பெண்:—அப்படி யொன்றுமில்லை. ஆனால் அவள் சௌகரியமாக வாழ்வதற்கும், என்னைப்போன்ற வேலையாட்களை வைத்துக் கொள்வதற்கும், விலையுயர்ந்த ஆடைகள் நகைகள் முதலியவற்றைப் பெறுவதற்கும் அவளுக்குப் பணம் அவசியமாக இருக்கிறதல்லவா? ஆகவே அவள் இவ்வாறு வெளியிலும் பணம் சம்பாதிக்க முயலுகின்றாள்.

தினகரன்:—நாடகத்திலேயே அவளுக்கு மிதமிஞ்சிய வரும்படி கிடைக்கிறதென்று சொல்லப்படுகிறதே. அவ்வாறிருக்க அவள் இவ்வாறு வெளியிலும் சம்பாதிக்க வேண்டிய அவசியமென்ன?

அப்பெண்:—நீங்கள் நினைக்கிறபடி அவ்வளவு அதிகமான வரும்படி கிடையாது. அதிருக்கட்டும், நீங்கள் நம்பிக்கைக்கு இடமிருக்கிறதா என்று கேட்டீர்களே. சாதாரணமாக என்னைப்போன்ற தோழிகள் எங்கள் எஜமானிகளிடம் அதிக செல்வாக்குடையவர்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்களென்றே நம்புகிறேன். இப்போதும் என் எஜமானி தனியாக வீட்டுக்கு வருவாளாயின் உங்களைப்பற்றி இப்போதே அறிமுகம் செய்து வைத்துவிடுகிறேன்.

186568

தினகரன்:—ஓ! அப்படியா? எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறதே. நான் சத்திரத்தில் சூதாட்டத்தில் பணம் தோற்றுப்போனது போன்ற சம்பவங்களெல்லாம் எனக்கு மறந்துவிட்டன. இப்போதே என்னை உன் எஜமானியிடம் அறிமுகம் செய்துவைக்க சாத்தியப்படுமா?

அப்பெண்:—சாத்தியப்படுமென்றே நினைக்கிறேன். என் எஜமானியின் வண்டி வந்ததும் நீங்கள் சிறிது தூரம் சென்று மறைவாக இருங்கள். நான் உங்களைப்பற்றி என் எஜமானியிடம் தெரிவித்துவிட்டு வருகிறேன். அவள் உங்களைத் தன்னுடன் சாப்பிட வரும்படி அழைத்தால் ரொம்பவும் சந்தோஷம் தான். ஏனெனின் அவள் இரவில் எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும் வந்த பிறகுதான் சாப்பிடுவது வழக்கம், இப்போதும் சாப்பாடு தயாராக இருக்கிறது.

தினகரன்:—இப்போது நீ பேசுவதெல்லாம் வெறும் வேடிக்கையாக இல்லாமல் உண்மையிலேயே நடக்கக்கூடிய காரியமாக இருந்து அப்படியே நடந்துவிடுமானால் நாளைய தினம் நான் உனக்கு இருபது பவுனல்ல ஐம்பது பவுனைத் தான் கட்டாயமாகக் கொடுப்பேன்.

அப்பெண்:—அதெல்லாம் சரிதான். இப்போது என் எஜமானி வரும்போது அவளுடன் ஒரு பேர்வழி வருகிறாரா? இல்லையா? என்பதைப் பொருத்துத்தான் மேற்கொண்டு நடக்க வேண்டிய வேலையைக் கவனிக்க வேண்டும்.

தினகரன்:—நீ இப்போது குறிப்பிட்ட அந்தப் பேர் வழி யார்?

அப்பெண்:—அவரா? அவர்தான் நாடகக் கம்பெனியைச் சேர்ந்த விசுவநாதன் என்பவர்.

தினகரன்:—ஓ! அவர் அக்கம்பெனியின் பிரபல அதிகாரி களுள் ஒருவரல்லவா? நான் அவரையும் அறிவேன். நாடகக் கொட்டகையில் அவருடன் பலமுறை பேசியும் இருக்கிறேன். சிறிது பெருத்த சரீரமுடையவராகவும், வயதானவராகவும் இருப்பார்.

அப்பெண்:—ஆம்; அவர்தான். அவர் மிகவும் நல்ல வர். என்றாலும் இந்த இடத்தில் நான் வேறு ஒரு ஆடவ ருடன் பேசிக் கொண்டிருந்தால் அவருக்குக் கோபம் வரு மல்லவா? அவர் என் எஜமானியிடம் அதிக பிரியமுள்ள வர். தன் சொந்த மனைவியுடன் எப்படி நடந்து கொள் வாரோ அவ்வளவு ஆர்வத்துடன் நடந்து கொள்கிறார்.

தினகரன்:—அவருக்கும் உனது எஜமானிக்கும் என்ன சம்பந்தம்? அவளுக்கு ஏதேனும் பாத்தியமா?

அப்பெண்:—என்ன? இப்படிக் கேட்கிறீர்களே! உங்க ளுக்கு உலகமே ஒன்றும் தெரியாதோ? நீங்கள் இப்போது அவளுடன் எத்தகைய சம்பந்தத்தைப் பெற விரும்புகிறீர் களோ அதேவிதமான சம்பந்தம் அவர்களிடையே இருந்து வருகிறது. இதையும் நீங்கள் தெரிந்துகொள்ள முடியவில்லை யென்றால் எனக்கு ஆச்சர்யமாகவே இருக்கிறது.

தினகரன்:—அப்படியானால் உன் எஜமானி அவரு டைய பாதுகாப்பிலேயே இருக்கிறாளா? வெளியில் உன் எஜமானியின் கற்பைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொள் கின்றனரே! எனக்கு மட்டும் சந்தேகம்தான். நாடக மேடையில் ஏறும் பெண்களும் கற்பிற் சிறந்தவர்களா யிருப் பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. ஆயினும் உன் எஜமானி விசுவநாதரின் ஆதரவில்தான் இருக்கிறாளோ?

அப்பெண்:—ஆம்; அவருடைய ஆதரவில்தான் இருக்கிறள்? இதில் ஆச்சர்யமென்ன இருக்கிறது? எனக்கொன்றும் தோன்றவில்லையே.

தினகரன்:—ஆச்சர்யம் எதுவும் இல்லைதான். அது கிடக்கட்டும். உன் எஜமானிக்கு விசுவநாதனிடம் உண்மையிலேயே அந்தரங்க அன்பும் விசுவாசமும் உண்டா?

அப்பெண்:—அப்படி யொன்றுமில்லை. ஏதோ பணம் கொடுக்கிறரே என்பதற்காக அவரிடம் அன்புள்ளவள் போல் நடிக்கிறள். அவ்வளவுதான். உங்கள் காரியத்தை தையும் விரைவில் முடித்துவிடலாம். அதோ அவள் வந்து கொண்டிருக்கிறள். வண்டி வரும் சத்தமும் கேட்கிறது. நீங்கள் சிறிது தூரம் சென்று மறைந்து இருங்கள்.

அவள் அவ்வாறு கூறி முடிக்கும்போது உண்மையிலேயே ஒரு வண்டி மிக வேகமாக வரும் சத்தம் தினகரனுக்குக் கேட்டதால் அவனும் அவளது இஷ்டப்படியே சிறிது தூரம் சென்று ஒரு மரத்தடியில் மறைந்து நின்றன். உடனே ஒரு பெரிய குதிரை வண்டி அந்த வாயிலின் முன் வந்து நின்றது. அத்தோழி அவ் வண்டியின் அருகில் வந்து நின்றள். வண்டிக்காரன் வண்டியைவிட்டு இறங்கியதும் அந்த வண்டியிலிருந்து ஒரே ஒரு மாது இறங்கினள். அம்மாது அம்மாளிகையின் வாயிலில் நுழைந்து உள்ளே சென்றள்.

இதையெல்லாம் மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த தினகரம் பிரபு மெய்சிலிர்க்கப் புளகாங்கிதமடைந்து தனக்குள், 'இன்னும் சில நிமிஷ நேரத்துக்குள் நான் அழகிற் சிறந்த ராஜலட்சுமியுடன் பேசும் பாக்கியத்தைப் பெறுவேன். அவளுடைய தோழியாகிய அப்பெண் மிக்க சாமர்த்

தியமுடையவள். அவள் எப்படியாவது இக் காரியத்தில் வெற்றி பெறும்படி செய்துவிடுவாள். ஆனால் நான் இன்னும் எவ்வளவு நேரம் இங்குக் காத்திருக்க வேண்டுமோ தெரியவில்லை. இப்போது அத்தோழி தன் எஜமானியுடன் என்னைப்பற்றிப் பிரஸ்தாபித்துவிட் டிருக்கலாமென்றே நம்புகிறேன். ராஜலட்சுமியைப்பற்றி ஜனங்கள் ஏதோ பிரமாதமாகப் பேசிக் கொண்டார்களே! நான் இன்று இரவு உண்மையைக் கண்டு பிடித்துவிட்டேன். ராஜலட்சுமி மகா உத்தமி என்று சொல்லி எல்லாரும் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். ஆனால் அவளோ நாடகக் கம்பெனியைச் சேர்ந்த ஒரு அதிகாரியை வைத்துக் கொண்டிருக்கிறாள். எப்படியிருந்தாலும் அவள் பலருடைய வேண்டுகோளை மறுத்துவிட்டதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வாறிருக்கையில் என்னை மட்டும் அவள், என்னைப் பார்க்கும் முதல் முறையிலேயே ஏற்றுக் கொள்வாளாயின் அதுவும் என்னுடைய அதிர்ஷ்டமென்றே நான் கருதவேண்டும். எனினும் அத்தோழி சாமர்த்திய முடையவளாதலால் என் காரியம் வெற்றி யடையும்படி செய்துவிடுவாள் என்றே நம்புகிறேன். மேலும் நான் சாதாரண பிரபுவாகமட்டு மல்லாமல் உயர்ந்த பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதையும் ராஜலட்சுமி கவனிப்பாள் அல்லவா ?' என்று சிந்தித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு தினகரனுக்கு அரைமணி நேரம் கழிந்தது. இந்த அரைமணி நேரத்துக்குப் பின்னரும் அப்பெண் திரும்பி வாராததால் அவன் மனம் சிறிது சங்கடப்பட்டது. ஒருகால் தினகரனுடைய பைத்தியக்காரத்தனத்தைக் கண்டு அவள் சிரித்துக் கொண்டிருக்கிறாளோ வென்று சந்தேகித்து அவ்வாறு உண்மையில் அவன் ஏமாற்றமடைந்திருந்தால் அன்றிரவு தனக்கு நேர்ந்த பல அவமானங்களுடன் இதுவும்

சேர்ந்துவிட்டதற்காக அதிகம் வருந்தினன். ஆகவே தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவே கருதினன். ஆனல், ஆ! அம் மாளிகையின் தெருக் கதவு திறக்கப்பட்டது. ஒரு பெண் வெளியே வந்து வாயிலின் பக்கமாக வருவதைக் கண்டான். அவளைக் கண்டதும் அவனுக்கு அளவிலா ஆனந்தமுண்டாய் விட்டது. தனது காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டதாகவே நினைத்துச் சந்தோஷப்பட்டான். அவளை எதிர்நோக்கிச் சென்றான். 'சந்தோஷம்! எனக்கு என்ன செய்தியைக் கொண்டு வந்திருக்கிறாய்?' என்று கேட்டான். அதற்கு அவள் ஒன்றும் பதில் சொல்லாமலே உள்ளே அழைத்துச் சென்றாள். வழியில் அவள் அவனைப் பார்த்து, 'நான் உங்களுடைய காரியத்தில் வெற்றி கிடைக்கும்படி செய்வேன் என்று சொல்லவில்லையா?' என்று மட்டும் கேட்டாள்.

அம்மாளிகையில் முதலில் ஒரு ஹால் இருந்தது. அதிலிருந்து ஒரு அறைக்குச் செல்லும்படி அப்பெண் அவனிடம் கூறிவிட்டுத் தன் எஜமானியும் அங்கு வந்து சேர்வாள் என்று தெரியப்படுத்தினள். தினகரன் புகுந்த அந்த அறை நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வறையின் மத்தியில் இருந்த ஒரு மேஜையின்மீது பல இனிய ஆகார பதார்த்தங்களுடனும் தின்பண்டங்களும் மதுபானவகைகளும் வைக்கப்பட்டிருந்தன. அவ்வறையில் ஜன்னல்களுக்குத் திரைகள் இடப்பட்டிருந்தன. அறையில் பிரகாசமான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அறையில் நுழைந்த அவன், 'இன்னும் இரண்டொரு நிமிஷங்களில் நான், அழகிற் சிறந்த ராஜலட்சுமியைக் கண்ணாரக் கண்டு களிக்கப் போகிறேன். சமீபத்தில் இருந்து பார்ப்பதிலும் ஒருவகை ஆனந்தம் இருக்கிறது' என்று கூறிக்கொண்டே அதிக சந்தோஷத்தினல் தன்னிரு கரங்களையும் ஒன்றொடொன்று தேய்த்தான்.

அச்சமயத்தில் வெளிப்புறத்திலுள்ள ஹாலில் இரண்டொரு மாதர்கள் பேசும் சத்தம் அவனுக்குக் கேட்டது. உடனே அறையின் கதவு திறக்கப்பட்டு உயரமாகவும், அழகாகவும் உள்ள ஒரு மாது உள்ளே புகுந்தாள். அவள் தேகமெல்லாம் பார்ப்போருக்கு நன்கு தெரியும்படியான வகையில் உடையை அணிந்திருந்தாள். வேண்டுமென்றே அவள் அவ்வாறு அணிந்திருந்தாள் என்று கூறுவதும் தவறாகாது. அவள் நமது தினகரன் ஆவலுடன் எதிர்பார்க்கும் ராஜலட்சுமி அல்ல. ஆதலின் அவன் அம்மாது அவ்வீட்டுக்கு விருந்தினளாக வந்தவளாயிருக்க வேண்டும் என்று நினைத்து அவளுடன் பேசாமல் இருந்தான். அவள் மேஜையின் அருகிலிருந்த ஒரு சோபாவின்மீது உட்கார்ந்து கொண்டு அவனையும் பக்கத்திலிருந்த ஒரு ஆசனத்தில் உட்காரச் சொல்லி, 'பிரபுவே! நான் இரவில் இவ்வளவு நேரத்துக்குப் பின்னர் உங்களை வரவேற்பதுபற்றி நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் என்னைக் கண்டு அறிமுகம் செய்து கொள்ள மிக்க ஆவலுடன் இருப்பதாக என் தோழி தெரிவித்தாள்' என்று கூறினாள்.

அப்போது அவன் அளவிலா ஆச்சர்யமடைந்து, 'இதில் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது. இந்த மாளிகையில் வசிக்கும் எஜமானியையே பார்க்க விரும்புகிறேன்' என்று ஏமாற்றமடைந்தவன்போல் சொல்லவும் அம்மாது சிறிது ஆத்திரத்துடனும் அவமானத்துடனும், 'எனதன்புள்ள பிரபுவே! நான்தான் இங்குள்ள எஜமானி; நீங்கள் வேறு எந்த மாதையேனும் காண விரும்பியிருந்து இப்போது ஏமாற்றமடைந்திருந்தால் நீங்கள் உடனே இங்கிருந்து விலகிச் செல்லலாம். நானாக உங்களைக் காண முயற்சிக்காததால் இதில் எனக்கொன்றும் அவமானமோ ஏமாற்றமோ இல்லை' என்று தெரிவித்தாள்.

அதைக் கேட்ட தினகரம் பிரபு தன் மயக்கத்தினின்றும் நீங்கி, 'கோபித்துக் கொள்ளாதே. இம்மாளிகையில் வேறு ஒரு மாது வசிப்பதாக நான் தவறாக நினைத்திருந்தேன். ஆனால் இப்போது நான் யாருடைய எதிரில் இருக்கும்படியான பாக்கியம் பெற்றிருக்கிறேனோ அம்மாதும் மிக்க ரூபலாவண்ய முடையவளாக இருப்பதால் நான் நினைத்த அந்த மாதைக் காணாததால் ஏற்பட்ட ஏமாற்றம் மறைந்துவிட்டது. எனவே மகா சந்தோஷ மடைகிறேன்' என்று எதிரிலிருந்த மாதைப் பாராட்டிப் பேசினான். அப்போது அவள் தன்னுடைய அழகிய பற்கள் தெரியும்படி புன்னகை புரிந்த வண்ணம், 'ஏமாற்றமடைந்தபோதும் கவலைப்படாமல் என்னைப் பாராட்டிப் பேசியதைக் கண்டு ஆனந்தமடைகின்றேன். ஆனால் இந்த இடத்தில் நீங்கள் சந்திக்க எண்ணியிருந்த மாது யார் என்றாவது சொல்வீர்களா?' என்று கேட்டாள்.

அதற்கு தினகரம் பிரபு, 'உண்மையைக் கூறி விடுகிறேன். நடனத்தில் மிகப் பிரசித்திபெற்ற ராஜலட்சுமியைச் சந்திக்க விரும்பினேன்,' என்று தெரிவிக்கவும் அவள் சிறிது பொறுமையுடன், 'இதில் எப்படி தவறு ஏற்பட்டிருக்கலாமென்பதை நானும் உணர்ந்து கொண்டேன். நானும் நாடகக் கம்பெனியைச் சேர்ந்தவளாதலால் இத் தவறு நேரிட்டிருக்கிறது' என்று கூறினாள். அப்போது தினகரம் பிரபு அம்மாதின் முன் முழங்காலிட்டதுடன் அவளது கரத்தைப் பிடித்துத் தன் அதரத்தின்மீது வைத்து அழுத்திக்கொண்டே உன் பெயர் என்ன என்று கேட்டான். அப்போது அம்மாது வஞ்சனையுடன்கூடிய சிரிப்புடன், 'என் பெயர் பங்கஜம். ஆனால் நாடகக் கம்பெனியிலும் அதன்மூலம் என்னை அறிந்தவர்களும் என்னை கமலகுமாரி என்றழைப்பார்கள் என்று விடையிறுத்தாள்.

அதைக் கேட்டதும் மிக்க களிப்படைந்த தினகரம் பிரபு, 'ஓ, அப்படியானால் நான் ஒரு அழகிய நடின மாதைக் காணமுடியவில்லை யென்றாலும் வேறு ஒரு அழகிய நடின மாதைக் கான நேர்ந்ததற்காக மிகவும் சந்தோஷப்படுகி றேன். உன்னை முதலிலேயே அறிந்து கொள்ள முடியாத தற்காக நான் முட்டாளாகத்தான் இருக்க வேண்டும். நான் நாடகமேடையில் பலமுறை உன்னைக் கண்டு உனது ஆற்ற லுக்காக உன்னைப் பாராட்டியிருக்கிறேன். என் நண்பர்க ளிடையே நாங்கள் அடிக்கடி பேசிக்கொள்ளும்போது நடிப் பதில் ராஜலட்சுமியைவிட நீதான் அதிக சாமர்த்தியமுடைய வள் என்று நான் சொல்வதுண்டு' என்று அவளைப் புகழ்ந்து பேசினான்.

அப்போது பங்கஜம் என்னும் கமலகுமாரி, 'என தன் புள்ள பிரபுவே! அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள். நான்தான் ராஜலட்சுமியின் ஸ்தானத்தில் இருந்திருக்க வேண் டும். ஆனால் முதலாளிகள் என்மீது பொறாமை கொண்டு அவளுக்கு முதன்மையான ஸ்தானத்தைக் கொடுத்து என்னை இரண்டாவதாக்கி விட்டனர். அது கிடக்கட்டும். சிறிது ஆகாரத்தை அருந்துவோம் வாருங்கள். சிறிது முதல்தர மான வொயினைச் சாப்பிட்டால் உற்சாகம் அதிகரிக்கு மாத லின் நமது சம்பாஷணை அதிக இன்பமானதாக இருக்கும்' என்று கூறவும் தினகரம் பிரபுவும் கமலகுமாரியும் எதிர் எதி ராக உட்கார்ந்து கொண்டு ஆகாரத்தை அருந்தினர். சிறிது நேரத்துக்குள் தினகரம் பிரபு ராஜலட்சுமியை அடியோடு மறந்துவிட்டான். தன்னெதிரில் இருக்கும் பங்கஜமென்னும் கமலகுமாரியின் இன்பத்தை அனுபவிக்கும் எண்ணத்துடன் அவளுடன் பல நிபந்தனைகளைப்பற்றி யெல்லாம் பேச ஆரம் பித்தான். இருவரும் இன்பமாக சம்பாஷித்துக் கொண் டிருந்தனர்.

## 15-வது அத்தியாயம்

—:o:—

### ஒரு சிறப்பான விருந்து

இப்போது நாம் இரத்தினபுரியில் மனோகரம் பிரபுவின் மனைவியும், சந்திரசேகரனுடைய சித்தியுமான மதனவல்லி சீமாட்டியின் மாளிகையில் நடப்பதைக் கவனிப்போம். முன் அத்தியாயத்தில் விவரித்தபடி தினகரம் பிரபு பல அனுபவங்களைக் கண்ட இரவின் அடுத்த நாள் மாலை சுமார் ஆறு மணி இருக்கும். மதனவல்லிச் சீமாட்டியின் மாளிகையில் ஷண்பகவல்லி தனது படுக்கையறைக்குப் பக்கத்திலுள்ள அறையில் உட்கார்ந்திருந்தாள். அந்த அறை அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்ததுடன் எழுதுவதற்கும், உட்காருவதற்கும் வேண்டிய எல்லாச் சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. தேவலோக மாதைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்த அக் கன்னிகையின் தேகத்தில் தங்கத்தினாலும், வைரத்தாலும் செய்யப்பட்ட நகைகள் மிளிர்ந்து கொண்டிருந்தன. அவளது எதிரில் பல சித்திரப்பாடமைந்த படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

ஷண்பகவல்லி, ஏதோ ஒரு விருந்துக்குச் செல்வதற்காகத் தன்னை இவ்வாறு விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கூந்தல் மிகத் திறமையாக நூதன முறையில் முடிக்கப்பட்டு அதில் ரத்ன கசிதமான நகை பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவளது எதிரிலிருந்த மேஜையின்மீது ஒரு புஸ்தகமும் ஒரு கடிதமும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அவள் படித்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்த புஸ்தகம் காலஞ் சென்ற

தேசியக் கவிச் சக்கிரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாருடைய தேசிய கீதங்கள். அந்நூலினிடம் அவளுக்கு அளவிலா ஆர்வம். அங்கிருந்த கடிதமோ தன் சித்தி மதனவல்லிக்குச் செல்வநாதரால் எழுதப்பட்டது. அதை மதனவல்லி சீமாட்டியே ஷண்பகவல்லியிடம் கொடுத்திருந்தாள்.

ஆனால் நாம் ஷண்பகவல்லியை அவ்வறையில் கவனிக்கும்போது அவள் அப் புஸ்தகத்தையோ கடிதத்தையோ படிக்காமல் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தாள். அவள் அவ்வாறு அலங்கரித்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்திருந்ததைக் கண்டால் ஓர் அழகிய சிலைபோல் காணப்பட்டது. அவ்வளவு அழகிய ஒரு பெண்ணின் மனமும் நோகும்படி நடந்து கொள்வதே பொல்லாத பாவமென்று அவளைக் கண்டோர் கருதுவர். எனினும் அவள் உள்ளத்தில் துக்கம் பொங்கி வழிந்து கொண்டிருந்ததென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. கிருஷ்ணகிரி ஜமீன்தார் தினகரம் பிரபுவின் மனைவியாக வாய்க்க வேண்டுமே என்னும் கவலைதான் அவளுக்கு அதிக துயரத்தைக் கொடுத்தது. பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த பெண்ணை பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஆடவனுக்கே கொடுத்து மணம் செய்விப்பதென்னும் கொடிய வழக்கத்துக்கு அவள் இரையாக வேண்டியதாயிற்று. அவளுக்குச் சிறிதும் அன்பு தோன்றாத ஒருவனை அதிலும் தனக்கு வெறுப்பும் தோன்றும்படியான குணத்தையும் செயலையும் உடைய ஒருவனை, தான் மணந்து கொள்ள வேண்டுமே என்று துக்கித்தாள். மேலும் அவள் தினகரம் பிரபுவை நேசிக்கவில்லையென்றால் வேறு யாரோ ஒருவரை அவள் மனமார நேசிக்கிறாள் என்பதை மறைக்க முடியாது.

இந்த வழக்கம் என்னும் பேய்க்கு மக்கள் அடிமைப்படுவதால் விளையும் தொல்லைகள் பல. எவ்வளவோ கல்வி கற்ற

வர்களும் நாகரிக முடையவர்களென்று சொல்லிக் கொள்ப வர்களும் அப்பேய்க்கு அடிமைப்பட்டுப் பகுத்தறிவுக் கொவ் வாத பல காரியங்களைச் செய்கிறார்களென்றால் வழக்கத்தின் வல்லமையைக் கூறவும் வேண்டுமோ? இன்றளவும் நமது நாட்டில் தீண்டாமை என்னும் மகா கொடிய வழக்கத்தை அனுஷ்டிப்பது நமது அடிமைப் புத்தியையல்லவோ காண் பிக்கின்றது. வழக்கத்தின் பேரால் நம்மில் ஒரு பகுதியின ரைக் கேவலம் மிருகங்களைவிட இழிவாக நடத்துவது மானு ஷிக தர்மத்துக்கு ஏற்குமா! அது மட்டுமல்ல. பால் மண மாறாச் சிறு பெண்களைப் பலவந்தமாகச் சம்சார வாழ்க்கை யில் ஈடுபடுத்தி விடுவதான பாலிய விவாகமென்னும் பழக்க மும் நம்மைப் பலவகையான துயரத்துள் ஆழ்த்துகின்றது. இவ்வாறாக எவ்வளவோ பழக்க வழக்கங்கள் நமது முன் னேற்றத்துக்குத் தடையாக இருந்தும், பகுத்தறிவுக்கும் காலத்துக்கும் ஒவ்வாததாக இருந்தும், அவற்றை விடாமல் பற்றிக்கொண்டிருப்பது நமது பண்டைப் பெருமைக்கு இழி வைத் தருவதே யாகும்.

ஷண்பகவல்லி நாம் மேலே குறித்தவாறு ஆழ்ந்த சிந்த னையில் மூழ்கியிருந்தபோது, 'ஆம்; அவர் பணக்காரக் குடும் பத்தில் பிறக்காதவராயினும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங் களை அணியாதவராயினும் அவரது இனிய குணாதிசயங்க ளும், நன்னடத்தைகளும் என் மனதைக் கொள்ளை கொண்டு விட்டன. அவர் இயற்கை அழகில் சிறந்தவர். தனது வாழ்க்கைக்கு அவசியமான பொருளைச் சம்பாதிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர். நான் அவரை மனமார நேசிக்கிறேன். இந்த உண்மையை மறைத்து வைக்க முடியாது. அவரிடத் தில் எனக்கு அளவிலா அன்பு இருக்கிறதென்பதை ஒப்புக் கொள்வதாலேயே என்னை நானே துக்கத்தில் ஆழ்த்திக்

கொள்வதாக இருக்கிறதல்லவா? ஏனெனின், நான் அவரை விவாகம் செய்துகொள்ள முடியாது. என் அன்பெல்லாம் வியர்த்தமாகத்தான் போகவேண்டியிருக்கிறது. அவரும் என்னை மனமார நேசிக்கிறார் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. ஆம்; மோகனதாஸ் என்னை அன்புடன் நேசிக்கிறார். நான் இவ்வாறு துக்கத்துடன் இருக்கும்போது ஏதோ அதிக சந்தோஷமுடையவளைப் போல் நடிக்க அந்த விருந்துக் குப் போகவேண்டியதாய் இருக்கிறதே' என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் அவள் உட்கார்ந்திருந்த அந்த அறை யின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே நுழைகிறவர் யாராயி னும் அவர், தன் மனதில் ஏதோ துக்கம் இருப்பதைத் தன் முகக்குறியினால் அறிந்து கொள்ளலாகாதென்னும் எண்ணத் துடன் ஷண்பகவல்லி ஏதோ புஸ்தகம் படிப்பவள்போல் மேஜைமீதிருந்த புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டே உட் கார்ந்தாள். அப்போது அவளுடைய சிறிய தாயான மதன வல்லி சீமாட்டி அறையில் புகுந்ததைக் கண்ட அவள், 'அன் புள்ள சித்தியாரே! தெருவில் வண்டி தயாராக இருக்கிறதா?' என்று கேட்டாள். அப்போது விலையுயர்ந்த ஆடை ஆபரணங்க ளால் தன்னை அலங்கரித்துக் கொண்டவளும் சிறிது வயோ திகத்தை யடைந்தவளும், பாலியத்தில் மிக அழகானவளாய் இருந்திருக்க வேண்டுமென்று காணப்படுகிறவளுமான மதன வல்லி சீமாட்டி, 'அன்புள்ள ஷண்பகவல்லி! ஆம்; வண்டி தயாராக இருக்கிறது. இப்போது மணி ஆறரை ஆகிவிட் விட்டது. ஹேமவதி சீமாட்டி சரியாக ஏழு மணிக்கெல்லாம் விருந்து ஏற்பாடு செய்திருக்கிறாள். அவள் குறித்த காலத் தில் எதையும் செய்யும் சுபாவமுடையவள்' என்று கூறினாள்.

ஷண்ப:—சித்தியாரே! நான் தயாராகவே இருக்கி

றேன். அரைமணி நேரத்தில் அவர்களுடைய பங்களாவுக் போய்விடலாம். குறித்த வேளையைவிட அதிக முன்னதாக அங்கே இருக்க நீ விரும்புவாய் என்று நான் நினைக்க வில்லை.

மதன:—ஆம்; நீ சொல்வதும் சரிதான். வேண்டுமானல் ஐந்து நிமிஷம் தாமதித்துப் புறப்படுவோம். நான் உன்னிடம் அனுப்பிய செல்வநாதரின் கடிதத்தைப் படித்துப் பார்த்தாயா?

ஷண்ப:—படித்துப் பார்த்தேன். எனக்கு ஆச்சர்யமாக வல்லவோ இருக்கிறது. அவர் முதல் முறையாக என்னை நாடகக் கொட்டகையில் சந்தித்தபோது இங்கு வந்து உன்னிடம் அறிமுகம் செய்துகொள்ள மிக ஆவலுடன் இருப்பதாக அறிவித்தார். அப்போது நானும் அவர் இங்கு வந்தால் நீ அவரை மரியாதையாகவே வரவேற்பாய் என்றும் தெரிவித்தேன். ஆனல் இப்போது அவர், தனக்குப் பல வேலைகள் இருப்பதாகவும், அவற்றில் கவனம் செலுத்தியிருப்பதால், உன்னிடம் அறிமுகம் செய்து கொள்வதற்குச் சௌகரியமாக மனோகரம் பிரபு கொடுத்த கடிதத்தின் பலனை அனுபவிக்க இப்போது சாவகாசமில்லை யென்றும், எழுதியிருக்கிறர். பிறகு ஒருநாள் எனது சகோதரன் அவருக்கு விருந்து வைத்தானே அப்போதும் அவன் அவரை மரியாதையாகவே நடத்தியிருப்பான்.

மதன:—செல்வநாதர் ஒருவிதமான சுபாவமுடையவராக இருக்கிறர். அவர் தனக்கு எப்படிச் சௌகரியமோ அப்படி நடந்து கொள்ளலாம். அதிருக்கட்டும். இப்போது நாம் போகப்போகும் விருந்துக்கு உனது சகோதரன் சந்திரசேகரனும் வருவா னல்லவா?

ஷண்ப:—ஆம்; வருவானென்றே நினைக்கிறேன். ஆனல் நான் இன்று முழுதும் அவனைக் காணவில்லை.

மதன:—அப்படியா? சந்திரசேகானுடைய சினேகி தன் தினகாம் பிரபுவாவது இங்கு வந்தாஞ?

ஷண்ப:—இல்லே. அவர் சென்ற சனிக்கிழமை இங்கு வந்து என்னேயும் என் சகோதானேயும் நாடகத்துக்கு அழைத்துச் சென்றதுதான். பிறகு அவரைக் காணேம்.

மதன:-என்ன? இன்று செவ்வாய்க்கிழமை ஆயிற்றே! ஓ! மூன்று தினங்களாக உன்னே வந்து காணுமலா இருக்கிருன். இது கூடாத காரிய மன்ருே? ஆயினும் நம்மைப் போன்ற உயர்தர குடும்பங்களில் இப்படி யெல்லாம் நடப்பதும் சகஜமாகவே இருக்கிறது. இதர அந்தஸ்துள்ள வகுப்பினரின் பழக்க வழக்கங்களுக்கும் நமது பழக்க வழக்கத்துக்கும் அதிக வித்தியாச மிருக்கிறது.

ஷண்ப:—அப்படியானுல், நான் நம்மைவிடக் குறைந்த அந்தஸ்திலுள்ள வகுப்பில் பிறவாமல் போனேனே என்று வருந்துகிறேன்.

மதன:—குழந்தாய்! நான் இப்படிப்பட்ட சொற்பிரயோகங்களேக் கேட்க விரும்பவில்லே.

ஷண்ப:—என்போன்ற பெண்களுக்கு எல்லா வகையிலும் சுதந்தாம் மறுக்கப்பட்டிருந்த போதிலும் எங்கள் மனதில் தோன்றியதைச் சொல்வதற்குமா சுதந்தா மில்லாமல் போய் விட்டது.

மதன:—ஆ! நீ என்ன சொல்கிருய் என்பது இப்போதுதான் தெரிகிறது. நான் உன்னுடைய நன்மையை உத்தேசித்து கிருஷ்ணகிரி மைனர் ஜமீன்தார் உன்னே விவாகம் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்ததற்காக நீ நன்றி பாராட்டாமல் அவ்விஷயத்தில் அதிருப்தியாகவே இருக்கிருய். அது சம்பந்தமாகத்தான் இப்போதும் ஏதோ பேசுகிருய்போ லிருக்கிறது. நான் செய்த நன்றியை மறக்க வேண்டாம்.

ஷண்ப:—இல்லை. இல்லை. ஒருகாலும் உன் விஷயத்தில் நான் நன்றி மறந்தவளாக நடக்கவே மாட்டேன். என் தாயார் இறந்த பின்னர் நீயே தாய்போல் இருந்து என்னைக் காப்பாற்றி யிருக்கிறாய். நீ செய்வதெல்லாம் எனது நன்மைக் காகவே என்பதை நானும் அறிவேன். ஆயினும் ஒரு விஷயத்தில் எனக்குத் திருப்தியே இல்லை.

மதன:—என் அன்புள்ள குழந்தாய்! அதற்குமேல் ஒன்றும் பேசவேண்டாம். நீ என்ன சொல்லப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ அந்த தினகரம் பிரபுவை நேசிக்கவில்லை என்னும் அப்பழங் கதையையே சொல்லப் போகிறாய். ஆயினும் நம்முடைய கூட்டத்தில் கலியாணத் துக்கும் அன்புக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. என்னுடைய ஆஸ்திபாஸ்திகளும் என்னுடன் இறந்து விடுவதாக இருந்தால் அப்போது கலியாண விஷயத்தில் அதிக கவலை செலுத்தி எதிர் காலத்திய உன் சௌகரியத்தையும் கவனித்துச் செய்யவேண்டும். ஆனால் எனக்குப் பின்னரும் நான் உனக்கு இவ்வளவு சொத்துக்களைக் கொடுக்கும்போது கலியாணத்தைப்பற்றிய கவலை என்? தினகரனிடம் என்ன குற்றங்குறைகள் இருந்த போதிலும் அவன் உனக்கு எல்லா வகையிலும் சரியான ஜோடியே என்பதில் ஆட்சேபமில்லை. மேலும் இப்போது அவன் இளமைப் பிராயத்தில் இருப்பதால் இப்படித்தான் தவறு செய்வது சகஜம். மேலும் இப்போதே இப்படி ஆடிவிடுகிறவர்கள் பிற்காலத்தில் அமைதியும் சமாதானமு முடைய கணவன் மார்களாக இருக்கின்றனர். ஆனால் நாம் இங்கேயே இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் மணி ஆகிவிடுகிறதே.

மதனவல்லி சீமாட்டி இவ்வாறு கூறியதும் அம்மாதர்களிருவரும் மாளிகையை விட்டுக் கீழே இறங்கி வெளியில்

காத்திருந்த வண்டியில் ஏறிக்கொண்டனர். சொற்ப நேரத்துக்குள் வண்டியும் நந்தவனத் தெருவிலுள்ள சுந்தரம் பிரபுவின் மாளிகையின் முன் நின்றது. அவர்களிருவரும் வண்டியைவிட்டு இறங்கியதும் வெளியில் காத்திருந்த ஆட்கள் அவர்களை மாடிமீது அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஹேமவதி சீமாட்டி தன் இருபெண்களுடன், வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்கக் காத்திருந்தாள். காலஞ் சென்ற சுந்தரம் பிரபுவின் மனைவியான ஹேமவதி சீமாட்டி, தன்னுடைய நிலைமைக்கு எவ்வளவு அதிகமான விலை யுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணியலாமோ அவ்வளவு விலையுயர்ந்தவற்றை அணிந்து கொண்டிருந்தாள். அவளுடைய மூத்த குமாரியான ராஜேஸ்வரி தன் தாயைப்போலவே அழகும் தற்பெருமையும் உடையவளாதலால் அவளைப்போலவே ஆடை ஆபரணங்களை யணிந்து கம்பீரமாகக் காணப்பட்டாள். இளையகுமாரியான கற்பகமோ அடக்கமும் எளிமையும் உருவெடுத்தவள்போல் பணிவுடன் எளிய உடைகளை அணிந்து பார்ப்பதற்கு இனிமையாகத் தோன்றினாள்.

அம்மூவரும் மதனவல்லி சீமாட்டியையும் ஷண்பக வல்லியையும் வரவேற்ற பின்னர் பரஸ்பரம் க்ஷேம விசாரணை செய்து கொண்டனர். பிறகு மதனவல்லி, 'தினகரம் பிரபு எங்கே காணோம்' என்று கேட்டாள். அவன் முன்னரே அங்கு இராதது தவறான காரியம்போல் நினைத்த ஹேமவதி தன் கம்பீரமான தோற்றத்தில் சிறிது பழுது ஏற்பட்டது போல் பாவனைகாட்டி, 'அவனை நான் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்கிறேன். இப்போது இங்கே வரத் தவற மாட்டான் என்றே நம்புகிறேன். விருந்தொன்று இப்போது இங்கு நடைபெறுகிற தென்பது அவனுக்கு நன்கு தெரியும்' என்று விடை கூறினாள்.

அவள் அவ்வாறு கூறிக்கொண்டிருந்த போதே அந்த அறையில், தினகரம் பிரபுவின் கார்டியன்களில் ஒருவரான பஞ்சநதம் பிரபு நுழைந்தார். அவரை ஹேமவதி சீமாட்டி மிக்க மரியாதையுடனும், பணிவுடனும் வரவேற்ருள். அவர் வயது சென்றவ ராயினும் உயரமானவராயும், கம்பீரமான தோற்ற முடையவராயும், பேச்சிலும் நடத்தையிலும் பெருந் தன்மை வாய்ந்தவராயும் இருந்தார். அவர் எக்காரியத்தில் இறங்கினாலும் அதில் பக்குவமாக வெற்றி யடையக்கூடிய ஆற்றலும் திறமையும் வாய்ந்தவர். அவர் அத்தேசத்தில் பல சமஸ்தானங்களில் பெரிய உத்தியோகங்களை வகித்தவர். அவருடன் ஐந்து நிமிஷம் பழகும் சாதாரண மனிதரும் அவருடைய திறமையைக் கண்டுகொள்ளலாம். அவர் எதையும் அளந்தே பேசுவார். ஏதேனும் ஒரு காரியம் செய்வதாயின் அதனால் நன்மை விளையுமா? தீமை விளையுமா? என்பதையும் நன்கு ஆராய்ந்த பின்னரே அக்காரியத்தில் இறங்குவார். உலகத்தின் நன்மை முழுதுமே அவர் தோள்மீதே இருப்பது போலவும், அவர் ஆத்திரப்பட்டு ஏதேனும் சிறு தவறு இழைந்து விட்டாலும் உலக நன்மைக்கே பெருங் கேடு ஏற்படுவது போலவும் கருதியே அவர் தன் வாழ்க்கையை நடத்தி வந்தார். யாரேனும் முக்கிய மல்லாத சிறு விஷயத்தைப்பற்றியாவது அவரது அபிப்பிராயத்தைக் கேட்டாலும், அவர் அவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வராவிட்டால் எவ்விதத்திலும் கூருமல் மௌனத்துடன் இருந்து விடுவார். அவர் யார் எது கேட்டாலும் உடனே பதில் சொல்லி விடாமலும், ஆம் என்று ஒப்புக்கொண்டு விடாமலும் நடு நிலைமையிலேயே நின்று பேசுவார்.

தினகரம் பிரபுவின் மற்ருெரு கார்டியனை மனமோகனர் என்பவர் மனமோகன தேவிதாசர் கம்பெனியின் கூட்

டாளி. அவரும் அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். மனமோகனர் பஞ்சநதம் பிரபுவைப்போல் நிதானஸ்தரல்ல. பட படப்பும் ஆத்திரமும் உடையவர். அவரும் அவ்வறையில் நுழைந்தார். அவர் நுழைந்தபோதே, ஏதோ ஒரு நீதிபதியின் கோர்ட்டில் முக்கியமான வழக்கில் வாதிக்க வேண்டியதாயிருந்து சிறிது தாமதமாக வந்தால் எவ்வளவு பரபரப்புடன் அக்கோர்ட்டில் நுழைவாரோ அவ்வாறே நுழைந்தார். பிறகு பல பிரபுக்களும் சீமாட்டிகளும், தனவந்தர்களும் கௌரவமுள்ள மாதர்களும் அங்கு வந்து கூடினர். ஏனெனின், ஹேமவதி சீமாட்டி மிக்க ஆடம்பரமான முறையில் இந்த விருந்தை ஏற்பாடு செய்திருந்தாள். ஷண்பகவல்லியின் சகோதரனை சந்திரசேகரம் பிரபுவும் வந்திருந்தான். எல்லாரும் வந்து கூடிய பின்னர் தினகரன் வரவில்லையே என்று அவனது தயாரான ஹேமவதி சீமாட்டி மனம் வருந்திக் கொண்டிருந்தபோது அவனும் வந்து விட்டான். ஆகவே அழைக்கப்பட்ட ஒருவரும் பாக்கியில்லாமல் அனைவரும் அம்மாளிகையில் கூடியிருந்தனர்.

அப்போதுதான் மணி ஏழு அடித்து ஐந்து நிமிஷம் ஆகியிருந்தது. ஹேமவதி சீமாட்டி சரியாகத்தான் குறித்த வேளையில் விருந்தை ஆரம்பித்துவிட நினைத்ததால் எல்லாரும் வந்து விட்டார்களா என்று ஒருமுறை அங்கு வந்திருந்தவர்களனைவரையும் சுற்றிப் பார்த்தாள். அந்த வேளையில் நாம் முன் ஒரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறவனும், சுந்தர விலாச மாளிகையில் சேவகம் செய்கிறவனுமான அழகும் கம்பீரமும் பொருந்திய வேலைக்காரன் திடீரென்று அவ்வறையில் புகுந்து சர சரவென்று தன் எஜமானியின் அருகில் சென்றான். விருந்தைப் பரிமாறலாமா என்று கேட்பதற்காக அவன் வந்திருப்பானென அவள் நினைத்து அவன் வாய்

திறந்து பேசுவதற்கு முன் அவளாக, 'அப்படியே செய்ய லாம்; பரிமாறி விடு' என்றாள். ஆனல் அவன் மீண்டும் அவளைப் பார்த்ததிலிருந்து அவன் வேறு ஏதோ பேச விரும்புகிறான் என்பதை அறிந்து அவன் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்பவள்போல் அவன் பக்கமாகக் குனிந்தாள். அப்போது அவன், 'அம்மணி! வெளியில் தாழ்வாரத்தில் ஒரு மாது தங்களைக் கண்டு பேசவேண்டுமெனக் காத்திருக்கிறாள். அவள் ஏதோ மிக அவசரமான வேலையாகப் பேச வேண்டுமாம்' என்று தெரிவித்தான்.

அப்போது அவள், 'நீ அவளுக்குச் சரியான பதிலைக் கொடுத்து விடுவதுதானே' என்றாள். அதற்கு அவன், 'இப்போது நீங்கள் அவளைப்பார்க்க முடியாதென்று நான் கண்டிப்பாக அவளிடம் தெரிவித்தேன். ஆயினும் அவள் ஒன்பது மணிக்குள் இரத்தினபுரியின் வடகோடிக்குச் செல்ல வேண்டுமென்றும், ஆதலின் ஒரு நிமிஷ நேரமே பார்த்துப் பேசினலும் போதுமென்றும், அவசியமாகப் பேசியே ஆக வேண்டுமென்றும் கூறுகிறாள்' என்றான். இதைக் கேட்டதும் ஹேமவதி சீமாட்டி என்ன செய்வதென்று தோன்றாமல் அவள் யாரா யிருக்கலாம் என யோசித்துக்கொண்டே அந்நேரத்தில் வந்து காணவேண்டிய அவசியமென்ன என்பதையும் உணராதவளாய், 'சரி! நீ போய் அவளைக் கீழே இருக்கிற ஒரு அறையில் உட்கார வை. இதோ நான் வந்து விடுகிறேன்' என்று சொல்லி யனுப்பினாள்.

ஹேமவதிசீமாட்டியும் அவளது வேலைக்காரனும்பேசிய இச் சம்பாஷணையையோ, அல்லது சீமாட்டியின் முகத்தில் உண்டான மாறுதல்களையோ அக்கூட்டத்தில் இருந்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை. ஆனல் ஹேமவதியின் குமாரியாகிய ராஜேஸ்வரி மட்டும் அதைக் கவனித்தாள்,

ஆனால் அவர்கள் என்ன பேசினார்கள் என்பது மட்டும் அவளுக்குத் தெரியவில்லை. தன் தாயின் முகத்தில் அவ்வளவு மாறுதல்கள் காணப்பட்டதால் ஏதோ விசேஷமிருக்க வேண்டுமென நினைத்தாள். எனினும் தன் தாயுடன் தானும் செல்வதற்கு மட்டும் அவளுக்குத் தைரியமில்லை.

அப்போது ஹேமவதி சீமாட்டி தாமொரு அவசரவேலையாகச் சொற்பநேரம் வெளியில் சென்றுவர வேண்டியதற்காகத் தன்னை மன்னிக்க வேண்டுமென அங்கிருந்தவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டு வெளியே சென்று அம்மாது காத்திருந்த அறைக்குச் சென்று அவளுடன் சிறிதுநேரம் பேசிவிட்டுப் பிறகு விருந்தினர்கள் கூடியிருந்த அறைக்குச் சென்றாள். தன் தாயார் அங்கு இல்லாதிருந்த வேளையிலெல்லாம் ராஜேஸ்வரி தன் தாயைக் காண யார் வந்திருக்கிறார்களோ என்னும் நினைப்பாகவே இருந்தாள். தாயார் வந்தபிறகும் அவளுடைய முகத்தில் பழையபடி மாறுதல் இருப்பதைக் கண்டு ஏதோ என்னமோவென்று சந்தேகித்தாள். ஹேமவதி சீமாட்டி மட்டும் மனதில் சிறிதும் கவலை இல்லாதவள்போல் அங்கிருந்தவர்களுடன் பல விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தாள். ஆனால் அவளுடைய உள்ளத்தில் ஏதோ கவலை வேலை செய்துகொண்டிருக்கிறதென்பதை ராஜேஸ்வரி மட்டும் அறிந்து கொண்டிருந்தாள்.

இதற்குள் விருந்து பரிமாறப்பட்டு விட்டதாகவும் அனைவரும் வரலாமென்றும் அறிவிக்கப்பட்டது. உடனே அங்கிருந்தவர்களனைவரும் விருந்து மண்டபத்துக்குச் சென்றார்கள். அந்த மண்டபம் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இருபதுபேர் விருந்தினர்களுக்கு வேண்டியதையெல்லாம் சந்துஷ்டியாகப் பரிமாறினார்கள். அன்று கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாகிய ஹேமவதி சீமாட்டி மிக்க ஆடம்பரமான

முறையில் விருந்தை அளித்தாள். பலரும் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே பலவிதமான இனிய பதார்த்தங்களையும், பான வகைகளையும் அருந்தினர்கள். எல்லாருடைய முகத்திலும் சந்தோஷக் குறியே காணப்பட்டது. ஆனல் ராஜேஸ்வரியின் பார்வையில் ஹேமவதி சீமாட்டியின் முகத்தில் மட்டும் சந்தோஷக்குறி காணப்படவில்லை. தன் தாயின் மனதிலுள்ள கவலை என்ன என்பதை எவ்வகையாலேனும் தெரிந்து கொள்ள வேண்டு மென்னும் மனஉறுதியை ராஜேஸ்வரியடைந்தாள்.

இதற்குள் மணி ஒன்பது அடித்துவிட்டது. விருந்து மண்டபத்திலிருந்த பெண்களெல்லாம் அங்கிருந்து வெளியேறினர்கள். ஆடவர்கள் மட்டுமே அங்கு இருந்தனர். பெண்கள் போன பின்னர் ஆடவர்கள் சிற்சிலர் ஒன்ருகக் கூடிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். அப்போது தினகரம் பிரபுவும் சந்திரசேகரம் பிரபுவும் ஒன்ருகக் கூடிக்கொண்டு அவர்களுக்கு இன்பம் தரக்கூடிய பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று சந்திரசேகரன் தினகரனைக் கண்டு, 'சரி! நடினமாது ராஜலட்சுமியைப் பெறுவதில் நீ எவ்வளவு தூரம் வெற்றியடைந்திருக்கிருய்?' என்று கேட்டான்.

அதற்கு தினகரம், 'வெற்றியுமில்லை, ஒன்றுமில்லை. அது சம்பந்தமாய் நடைபெற்ற சம்பவங்களை இப்போது கூற முடியாது. உன் சேவகன் ஆறுமுகம் அவ்வளவு சமர்த்தனயிருந்தும் இவ்விஷயத்தில் தவறு இழைத்துவிட்டான்' என்ருன்.

சந்திர:—நீ என்ன சொல்லுகிருய்? அவன் அவள் இருப்பிடத்தைப்பற்றிச் சரியான தகவல் கொண்டு வரவில்லையா? அல்லது வேறு ஏதேனும் தவறு ஏற்பட்டுவிட்டதா?

தினகரன்:—கடினமாது ராஜலட்சுமியின் இருப்பிடம் இப்போதுகூட எனக்குத் தெரியாது. அவ்விஷயத்தில் நாம் அவனை அவள் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்கும்படி அனுப்பியதற்கு முன் இருந்த நிலைமையிலேயே இன்றும் இருக்கிறேன்.

சந்திர:—அப்படியானல் நமது ஆறுமுகம் கண்டு பிடித்த இடத்தில் அம்மாது சிரோமணி வசிக்க வில்லையா? இதென்ன ஆச்சர்யமாய் இருக்கிறது.

தினகரன்:—ஆறுமுகம் பின் தொடர்ந்து சென்ற மாது நாம் விரும்பிய ராஜலட்சுமியல்ல. ஆனாலும் பாவம், அது ஆறுமுகத்தின் குற்றமல்ல. அவன் யாரைப் பின் தொடர்ந்து சென்ருனே அம்மாதும் ராஜலட்சுமியைப் போலவே உயரத்திலும் உருவிலும் இருப்பவள். மேலும் அவள் முக மூடியை அணிந்து கொண்டிருந்ததால் அவளையும் ராஜலட்சுமியே என்று அனைவரும் நினைப்பதில் ஆச்சர்யமொன்று மில்லை.

சந்திர:—ஓ! அப்படியானல் ஆறுமுகம் பின் தொடர்ந்து சென்ற அப்பெண்மணிதான் யார்? நீ ஏதோ ஒரு புதிய கதை சொல்லப் போகிருய் போலத் தோன்றுகிறதே.

தினகரன்:—ஆம்; நான் சந்தித்தவள் பங்கஜம் என்னும் கமலகுமாரி. அவளும் அழகிலும் நடனத்திலும் சிறந்தவளல்லவா? ராஜலட்சுமியைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றமடைந்திருந்த எனக்குக் கமலகுமாரியைச் சந்தித்தது ஒரு ஆறுதலையே தந்தது என்பதில் ஆட்சேபமில்லை. நாங்கள் ஒரு விதமான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்று காலையிலும் அவள் எனக்கொரு இன்பம் நிறைந்த கடிதம் அனுப்பினள். அவள் தன் நண்பனும்

நாடகக் கொட்டகையின் அதிகாரிகளில் ஒருவனுமான விசுவநாதனுடைய சினேகத்தை ஒழித்து விட்டதாக அதில் தெரிவித்திருக்கிருள்.

சசந்திர:—அப்படியாளுல் நீ அவளை உன்னுடைய ஆதரவில் எற்றுக்கொண்டு விட்டதாக ஒப்புக்கொண்டு விட்டாயா? இனி ராஜலட்சுமியைப் பெறுவதென்னும் முயற்சியை நீ கைவிட்டு விடுவாய் போலும்!

தினகரன்:—ஆம்; அதில் சந்தேகமில்லை. கமலகுமாரியும் எங்களுக்குள் ஏற்பட்டுள்ள நிபந்தனையில் இதையும் ஒன்ருகச் சேர்த்திருக்கிருள்.

சந்திர:—சரி, அப்படியாளுல் இனி நான் ராஜலட்சுமியைப் பெற முயற்சி செய்வேனுயின் அதை நம்பிக்கைத் துரோகமென்ருே வஞ்சனை யென்ருே நினைக்கமாட்டாயல்லவா?

தினகரன்:—ஆஹா! நீ தாராளமாக முயற்சிசெய்யலாம். கமலகுமாரி கிடைத்ததிலேயே நான் அதிக திருப்தியடைந்து விட்டேன். எனக்கு இனி ராஜலட்சுமியின் ஞாபகமே வாாது. ஆதலின் நீ முயற்சி செய்து அதில் வெற்றியடைவதில் எனக்கு எத்தகைய ஆட்சேபனையுமில்லை.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோதே எல்லாரும் முதலில் கூடியிருந்த அறைக்குச் சென்ருர்கள். அங்கே அனைவருக்கும் பான வகைகள் அளிக்கப்பட்டன. பிறகு நாட்டியத்திற் சிறந்த நடினமாதர்கள் நடிக்க ஆரம்பித்தார்கள். அதைக்காண விருந்துக்கு வாரத பலரும் அங்கே வந்து கூடினர்கள். ஹேமவதி சிமாட்டி அவர்களனைவரையும் வாவேற்றவளாதலால் அனைவருக்கும் அவரவருக்குத் தக்கபடி உபசாரணை செய்து கொண்டிருந்தாள். அவள் ஒவ்

வொருவரிடமும் சென்று கொண்டிருந்தது அந்த அறைக்கே ஒருவித அழகைக் கொடுத்தது என்றே கூறலாம். அன்று அவளது அழகையும், கம்பீரத்தையும் பார்த்து மெச்சாதார் ஒருவரும் இல்லை. இன்னும் அங்கிருந்தவர்களில் மற்றவர்களுடைய கவனத்தை ஈர்த்தவர்கள் ஷண்பகவல்லியும், கற்பகமு மாவர். எனினும் ஹேமவதி சீமாட்டிக்குப் போட்டி போடுவதுபோல் எல்லாவிதத்திலும் ஒப்பற்றவர்களாக விளங்கியவள் ராஜேஸ்வரியே.

அனைவரும் நடனத்தைக் கவனித்துக் கொண்டிருந்த போது ராஜேஸ்வரி மட்டும் அக்கூட்டத்தை விட்டுச்சென்று கீழே இறங்க முயற்சித்தபோது வழியில் படிக்கட்டுகளின் அருகே இரண்டு சேவகர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் இரண்டொருமணி நேரத்துக்கு முன் ஹேமவதி சீமாட்டியிடம் வெளியில் யாரோ வந்து காத்திருப்பதாகத் தெரிவித்தான். ஆதலின் அவள் மற்றொரு சேவகனை மெதுவாக ஏதோர் வேலை செய்யும்படி கட்டளையிட்டு அனுப்பி விட்டு மோகன சுந்தரம் என்னும் அவ்வேலைக்காரனைத் தன் அருகில் அழைத்து, தன் கூர்மையான பார்வை முழுவதையும் அவன்மீது செலுத்திய வண்ணம், 'மோகனம்! சிறிது நேரத்துக்குமுன் நீ என் தாயாரிடம் கூறிய சமாசாரம் என்ன? அதை அவள் கேட்டது முதல் அவளது முகத்தில் ஒருவிதமான துக்கக்குறி காணப்படுகின்றது. அதனால் எனக்கும் வருத்தமாகவே இருக்கின்றது. ஆதலின் அது என்ன என்பதை உடனே சொல்' என்று பரிவுடன் கேட்டாள். ஆனால் அவள் உண்மையைச் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்வதாயின் அவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகமிருப்பதாகவும், அதை அடக்கிக்கொள்ள முடியவில்லையென்றும் கூறியிருக்க வேண்டும்.

அப்போது மோகனம், 'யாரோ ஒரு மாது உங்கள் தாயாரைக் காணவேண்டுமென்று வெளியே காத்திருந்தாள். அதைத்தான் நான் உங்கள் தாயாரிடம் தெரிவித்தேன்' என்று தெரிவித்தான். அதற்கு அவள் 'என்ன வேலையாக என் தாயாரிடம் வந்தாளோ தெரியவில்லையே! இப்போது பார்க்க முடியாதென்று தெரிவித்தும் அவள் பிடிவாதமாக இருந்ததால் விசேஷம் ஏதோ இருக்க வேண்டும் அல்லவா?' என்று கூறினாள். அவன் மிக்க பணிவுடையவனேபோல் அடக்கத்துடன், 'அம்மா! அவ்விஷயம் எனக்குத் தெரியாது' என்றான். உடனே அவள் தன் எதிரில் நிற்கும் அந்த அழகிய இளைஞனை அப்படியே தின்றுவிடக் கருதுபவளே போல் தன் முழுப் பார்வையையும் அவன்மீது செலுத்திக் கூர்ந்து நோக்கியவண்ணம் இனிய குரலில், அந்த மாது எப்படிப்பட்டவளாகத் தோன்றினாள்' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அவள் சாதாரண மாதாகவே காணப்பட்டாள். அழுக்குப் படிந்த உடைகளை அணிந்திருந்தாள். மிக்க ஏழைபோலத் தோன்றியது. அவளைக் காணவே எனக்குப் பிடிக்கவில்லை. அவள் ஏதேனும் பிச்சை கேட்கவே வந்திருப்பாள் என்று நினைக்கிறேன். அவளுக்கு நம் போன்றாரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை தெரியவில்லை' என்று கூறினான்.

அச்சமயத்தில் படிக்கட்டுகளின் வழியே யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. உடனே ராஜேஸ்வரி அவ்விடத்தை விட்டு அகன்றாளென்றாலும் போகும்போது தனக்கு மோகனசுந்தரத்தின்மீது அளவிலா ஆர்வமிருக்கிறதென்பதை அவன் உணரும்படி அவனைத் தன் கண்களால் பார்த்துவிட்டுச் சென்றாள். அவள் பிறகு மற்ற மாதர்கள் கூடியிருக்கும் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தாள். அப்போதும் அவள்

மனதில் மோகன சுந்தரத்தின் உருவமும் தன் தாயாரைக் கண்டது யார் என்னும் யோசனேயும் முன்னணியில் இருந்தது.

தினகரம் பிரபுவின் கார்டியன்களில் ஒருவரான மனமோகனரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார் என்று முன்னமே கூறியிருக்கிறே மல்லவா? அவருடைய கூட்டாளியாகிய தேவிதாசரும் அந்த விருந்துக்கு வந்திருந்தார். அவர் மனமோகனரைப்போல் படபடப்பு, ஆத்திரம் முதலியன இல்லாதவராய் நிதானஸ்தராகவும், காரியத்தில் கண்ணுக இருப்பவராகவும் இருந்தார். அவர் பல அவசர வேலேகளேக் கவனிக்க வேண்டியவராக இருந்ததால் விருந்துக்குத் தாமதமாக வந்தார். அவர் வந்ததும் மனமோகனர் அவரை அழைத்துத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டார். அவர்களிருவரும் பின்வருமாறு பேசிக் கொண்டனர்.

மனமோகனர்:—நான் நாளேயதினம் காரியாலயத்துக்கு வர முடியாது. எனக்கு வீட்டிலேயே அதிக வேலேகள் இருக்கின்றன. எனினும் அந்த கோர்ட் விவகார சம்பந்தமாக நாம் இருவரும் நாளே காலே சிறிது நேரமாவது பேச வேண்டியிருக்கிறது.

தேவிதாசர்:—அப்படியானல் நாளே காலே நான் உங்கள் மாளிகைக்கு வரட்டுமா?

மனமோகனர்:—ஏன்? நீங்கள் இன்று இரவே எங்கள் வீட்டுக்கு வந்துவிடலாம். சுகமாகப் படுத்திருந்தால் காலே எழுந்து ஆகாரம் உட்கொள்ளும்போது எல்லா விஷயங்களேயும் பேசிவிடலாம். நீங்கள் கலியாணமாகாத பிரம்மசாரி தானே. யாருக்கேனும் பதில் சொல்ல வேண்டுமா?

தேவிதாசர்:—சரி; அப்படியே ஆகட்டும். நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது நான் தடுப்பதா? என் வண்டி வந்தால் அதை வீட்டுக்குத் திருப்பி யனுப்பிவிடுகிறேன்.

இவ்வாறு அவர்கள் பேசி முடிந்ததும் தனித்தனியே பிரிந்து விருந்தினர்களான கூட்டத்தில் பலருடன் கலந்து வேடிக்கையாகக் காலங்கழித்தனர். ஹேமவதி சீமாட்டி அளித்த விருந்து இவ்வளவு சிறப்பாக நடைபெற்றது. ஷண்பகவல்லி அதிக சந்தோஷ முடையவளேபோல் அவ்விருந்தில் காணப்பட்டாலும் அவளது மனத்தில், தன் பிற்கால வாழ்க்கை முழுதுக்கும் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் கவலையை அதிகரிக்கச் செய்துகொண்டே யிருந்தது. மேல்நாட்டிலும் அக்காலத்தில் பெண்களுக்குச் சுதந்தரமில்லாமல்தான் இருந்தது. விவாக விஷயத்தில் பெண்களின் சம்மதியின்றி அதை முடித்துவிடுவதென்னும் வழக்கம் கண்டிப்பாகக் கைவிட வேண்டியதே யாகும். பெண்கள் விரும்பாத ஆண்களுக்கு அவர்களைக் கட்டிவிடுவதால் பிறகு அவர்களுடைய ஆயுள் முழுதும் அவர்களின் வாழ்க்கை துன்பமானதாகவே முடிந்து விடுகிறது. அதிலும் இக்காலத்தில் நமது தேசத்தில் விவாகமென்பது ஒரு வியாபாரம் போல நடத்தப்படுகிறது. மணமகளின் பெற்றோர் பணம் வாங்கிக் கொண்டு பெண்ணை ஏற்றுக் கொள்கிறார்கள். ஒரு கால் வீட்டிலும், மற்றொரு கால் காட்டிலும் வைத்திருக்கும் கிழவர்களுக்கும் இளங் கன்னிகைகளைக் கொடுத்துவிட்டுப் பாலிய விதவைகளாக்கி இந் நாகலோகத்தில் வாழும்படி செய்துவிடுகின்றனர். இவைகளெல்லாம் மதத்தின் பெயரால் நடைபெறுவதுதான் மிக்க வருந்தத்தக்கதாக இருக்கிறது. இத்தகைய சமூக சம்பந்தமான சீர்திருத்தங்கள் பல மிக அவசரமாகச் செய்ய வேண்டியிருந்தும் மதத் தலைவர்கள் சிறிதும் கவனம் செலுத்தாமல்

வீண் ஆடம்பரங்களிலும், தற்பெருமையிலும் காலங்கழித்து வருவது வருத்தத்தை யளிக்கின்றது.

——:o:——

## 16-வது அத்தியாயம்

———

### நடுக்குப்பத்தில் இந்திராபாய்

தினகரன் அன்று தோட்ட மத்ய விடுதியிலிருந்து தப்பித்துச் சென்றபின் அவ்விடுதியில் வசித்து வந்த மாகதம் என்னும் மாது ராட்சஸ குப்பனிடம் மறுநாள் பணத்துடன் வருவதாகத் தெரிவித்திருந்தபடியே, முன் அத்தியாயத்தில் கூறியபடி ஹேமவதி சீமாட்டி பெரியதொரு விருந்து நடத்திக் கொண்டிருந்த அதே இரவில் மாகதம் நடுக்குப்பத்திலுள்ள கோபாலன் தம்பதிகளுக்குச் சொந்தமான அப்பாழடைந்த மாளிகைக்கு வந்தாள். அம்மாளிகையின் ஒரு அறையில் ராட்சஸ குப்பன் தன் கூட்டத்தாருடன் உட்கார்ந்து கொண்டு மதுபானவகைகளை அருந்திக் கொண்டிருந்தான். ஆனால் மாகதத்தைக் கண்டதும் அவன் தடபுடலாக எழுந்து அவளுடன் மாடிமீதுள்ள இரகசிய அறைக்குச் சென்றான். அம்மாளிகைக்கு வரும் பலரும் இரகசியமாக ஏதேனும் பேசவோ செய்யவோ வேண்டியிருந்தால் அப்படிச் செய்வதற்காகவே அது ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இந்த அறையில்தான் எத்தனையோ கொடுமையான செயல்களைப்பற்றி யோசிக்கப்பட்டன. இங்குதான் அக்கொடிய செயல்களின் பலனாக அகப்பட்டவைகளை அவரவர்களும் பங்கிட்டுக் கொண்டனர். இங்கேதான் கோபாலனும் திருட்டுச் சொத்துக்களை யெல்லாம் மதிப்புப் பார்த்து அவற்றை

விலக்கு வாங்குவான். அந்த அறை பார்வைக்கு மிக ஆபாசமாக இருந்தது. சொற்ப தொகையைச் செலவழித்திருந்தாலும் அதை அழகானதாக்கி விட்டிருக்கலாம். ஆனால் கோபாலனுடைய பண ஆசைதான் அவ்வாறு செய்ய முடியாமல் தடுத்துவிட்டது. ஒவ்வொரு பைசாவையும் முடிபோடுவதில் அவன் கவனமாக இருந்தானே யொழிய ஒரு பைசா செலவு செய்வதென்றாலும் அவனுக்கு உயிரே போய்விடும்.

ஆனால் அந்த அறை அவ்வளவு ஆபாசமானதாக இருந்ததைக் கண்டும் அங்குக் கூடும் ஒருவராவது அதைப்பற்றிப் புகார் செய்யவே இல்லை. இந்த லட்சணத்தில் அந்த அறையில் மிக்க அசுத்தமான ஒரே ஒரு படுக்கையும் வைக்கப்பட்டிருந்தது. யாரேனும் தலைமறைவாக இருக்க வேண்டுமானால் அவர்கள் சௌகரியமாக அவ்வறையிலேயே மறைந்திருக்கும் பொருட்டு அப் படுக்கையும் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு அடிக்கடி கூடுகிற ஆட்களும் தேக சுத்தமோ மன சுத்தமோ அற்றவர்களாக இருந்தபடியால் அந்த அசுத்தமான இடம் அவர்களுக்குப் பொருத்தமானதாகவே இருந்தது. அவர்கள் தங்கள் காரியம் நடந்தால் போதுமென்று இருந்தார்களே யொழிய இடம் எப்படிப்பட்டதென்பதுபற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை.

மேலே குறித்த லட்சணங்களுடன் கூடிய அந்த இரகசிய மகாநாட்டு அறைக்குத்தான் மரகதமும் ராட்சஸ குப்பனும் சென்றார்கள். அவர்கள் இருவரும் அவ்வறைக்குச் செல்வதற்காக மாடியின்மீது ஏறுவதற்குமுன் மரகதம் அம் மாளிகையின் சொந்தக்காரியிட மிருந்து ஒரு சிறு மெழுகு வர்த்தி விளக்கை வாங்கிக் கொண்டாள். ராட்சஸ குப்பன் அந்த அறையில் இருந்த ஒரு பழைய முக்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு, 'சரி, நீ வாக்களித்தபடியே எனக்குச் சேர

வேண்டிய தொகையைக் கொண்டுவந்திருப்பாய் என்று நம்பு கிறேன். நேற்றிரவு உன் விடுதியில் நடந்த சம்பவங்களைப்பற்றியே பலவிதமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று கூறினன். அதைக் கேட்ட அவள், 'அப்படியானல் இனி நீ அதைப் பற்றி நினைக்கமாட்டாய் என்று நம்புகிறேன். ஒப்பந்தமென்றால் ஒப்பந்தம்தானே. நேற்று இரவு நடந்த விஷயம் இனி உனக்குச் சம்பந்தமற்றதாகிவிடுகிறது. இனி அது என்னைப் பொருத்த விஷயமாகும். உனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே நாம் இருவரும் இன்னும் நீண்ட காலம் சிநேகமாக இருக்க வேண்டுமென்றால் நீ இனி அவ் விஷயத்தில் பிரவேசிக்காமல் இருந்துவிட வேண்டும்' என்று அறிவுறுத்தினள்.

ராட்சஸ குப்பனும் ஏதோ வாக்களிக்க முயன்றபோது மாகதம் தன் சட்டைப் பையில் கையைப் போட்டு நூறு பவுன்களை எடுத்து அங்கிருந்த ஒரு சிறு மேஜையின்மீது வைத்தாள். அப்பொன் நாணயம் கண்டோர்கள் கண் கூசும்படி ஜ்வலித்தது. அதைப் பார்த்ததும் ராட்சஸ குப்பன் அளவிலா சந்தோஷமடைந்தான். உடனே அம்மாதும், 'இதோ உன்னுடைய நூறு பவுன்கள் இருக்கின்றன. எண்ணிக் கொள்ளலாம்' என்றாள். உடனே ராட்சஸ குணம் வாய்ந்த குப்பனும் அவற்றை எண்ணிப் பார்த்துக்கொண்டே, 'சரிதான். இதைப் பார்க்கும்போதே, நாவலாசிரியர்கள் வருணிக்கிறபடி எப்படிப்பட்ட கொடிய இருதய முடையவர்களின் மனமும் சாந்தியடைந்துவிடும். நீ உன் வாக்கின்படியே இப்போது இதைக் கொண்டுவந்து கொடுத்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். கீழ் அறைக்கு வந்து நீயும் ஒரு கோப்பை மதுபானம் அருந்திவிட்டுப் போகலாம்' என்றான். ராட்சஸ குப்பன் கூறியபடி பணத்தின் அருமையை

யும், கூறவேண்டுமா? பணமென்றால் பிணமும் வாய்திறக்கு மல்லவா? பணத்தால் ஆகாத காரியமும் ஒன்று உண்டோ? கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய பஞ்சமகா பாதகங்கள் செய்வதற்கும் காரணமாயும் மூலமாயும் இருப்பது இப்பணமே யாகும். பணம் இல்லாதவனை ஈன்றெடுத்த தாயும் வேண்டாள், செல்லாது அவன் வாயில் சொல் என்று ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர். ஆயினும் மக்கள் மிகப் பரிசுத்தமான எளிய வாழ்க்கையை வாழ்ந்து அதற்கான பணத்தை நீதி மார்க்கத்தில் சம்பாதிக்க வேண்டுமே யொழிய பேராசை கொண்டு பல துன்மார்க்கங்களாலும் செல்வம் தேடுவது அயோக்கியத்தன மாகும். மேலும் செல்வர்கள் சுயநல மற்றவர்களாய், அச் செல்வத்தை ஏழைகளும் அனுபவிக்கும் வழியில் தங்கள் செல்வத்தைச் செலவழிக்க வேண்டும்.

மாகதம் அவ்வாறு குப்பனின் வேண்டுகோளின்படி கீழ் அறையில் மதுபானத்துக்காக வென்று சிறிது நேரம் தங்க முடியாதெனச் சொல்ல நினைத்துப் பேச வாயெடுக்கும் போது அவ்வறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டு இந்திராபாய் என்னும் அடிக்கடி அங்குவரும் வழக்கமுடைய மாது அவ்வறையில் உல்லாசமாக நுழைந்தாள். இதற்கு முன்பு ஒரு முறை அவள் அங்கு வந்தாளென்று நாம் முன்னரே கூறியபோது எந்த உடையில் வந்தாளோ அதே உடையில் இப்போதும் வந்தாள். அதாவது ஒரு பெரிய சேனைத் தலைவன்போல் ஆண்வேடம் தரித்துக்கொண்டு கம்பீரமாக அங்கே வந்தாள். அவள் அறையில் பிரவேசித்ததும் ஒரே பார்வையால் மாகதம், ராட்சஸ குப்பன் ஆகிய இருவரும் பேசும் விஷயத்தை அப்படியே கிரகித்து விடுபவள் போல் அவர்களிருவரையும் கூர்ந்து நோக்கினாள். பிறகு அங்கிருந்த

ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு, 'நான் உங்கள் விவ காரத்தைத் தடுக்கவில்லை என்றே நம்புகிறேன். நீங்கள் இரு வரும் இங்கு இரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பதாக அந் தக் கிழக் கோபாலன் தெரிவித்தான். நான் அவனிடம் ஒரு வேலையாக வந்திருப்பதால் இங்கு உங்களுடன் கலந்து கொள்வதில் ஏதும் தவறு இராதென்று நினைத்து இங்கு வந் தேன்' என்றாள்.

அதற்கு ராட்சஸ குப்பனும், 'ஆம்; உன்னுடைய அந் தஸ்துக்கு நீ கீழேயே காத்துக் கொண்டிருப்பதோ அல்லது அங்குள்ள என் ஆட்களுடன் கலந்து பேசிக் கொண்டிருப்ப தோ பொருந்தாது' என்று கூறினான். அப்போது அவள், 'நான் உன்னிடம் மரியாதையாகவே நடந்து கொள்கிறேன். ஆனால் நீ மட்டும் மரியாதையின்றியே நடந்து கொள்கிறாய். அதன் காரணம் என்ன?' என்றாள். அவன் 'அதற்குக் கார ணம் என்ன என்று எனக்கும் தெரியவில்லை. ஆயினும் உன் னிடம் எனக்கு எத்தகைய வெறுப்பும் கிடையாதென்பதை மட்டும் நிச்சயமாகக் கூறுகிறேன். மேலும் உன்னுடன் ஏதே னும் ஒரு வகையில் சினேகம் வைத்துக்கொள்ள வேண்டு மென்னும் ஆவல் எனக்கும் இருக்கிறது. நாம் இருவரும் ஒன்றாக இருந்து எந்த வேலையையும் செய்ததில்லை யல்லவா?' என்று சமாதானம் கூறினான்.

அப்போது இந்திராபாய் என்னும் ஆண் வேடந்தாங்கி வழிமறித்துக் கொள்ளையடிக்கும் அம்மாது, புன் சிரிப்புடன், 'நாம் இருவரும் வெவ்வேறு துறையில் ஈடுபட்டிருக்கிறோம். ஆயினும் என்ன? ஒரு பெரிய வேலையைப்பற்றி உன்னிடம் பிரஸ்தாபிக்கிறேன். அதில் நாம் இருவரும் கலந்து வேலை செய்வோம். மரகதம்! இதோ பார்! இந்த யோசனை கூறி யதும் குப்பன் முகத்தில் ஒருவித சந்தோஷக் குறி தோன்று

கிறது' என்றாள். உடனே குப்பனின் உள்ளத்தை நன்கு அறிந்த மரகதமும், 'ஆம் அவனிடம் நீயும் பரிபூரண நம்பிக்கை வைத்து பெரிய வேலைகளைப்பற்றி யெல்லாம் அவனிடம் சொல்ல ஆரம்பித்ததில் அவனுக்கு அடக்க முடியாத சந்தோஷ முண்டாய்விட்டது' என்றாள். குப்பனும் 'இந்திராபாய்! உண்மையிலேயே ஏதேனும் பெரியவேலை இருந்தால் சொல். நாம் இருவரும் சேர்ந்து அதைச் செய்து முடிப்போம். அதனால் நம்முடைய சினேகமும் அபிவிருத்தி யடையும்' என்று தெரிவித்தான்.

அவர்கள் அவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது அம் மாளிகையின் சொந்தக்காரனை கோபாலன் அங்கே வந்ததால் இந்திராபாய், 'ஆம்; என் யோசனையைப் பிறகு தெரிவிக்கிறேன்' என்றாள். கோபாலன் பார்வைக்கு வெகு விகாரமுடையவன். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமாதலால் அவன் முகக் குறியிலிருந்தே அவன் உள்ளத்தில் எத்தகைய கொடுமை நிறைந்திருக்கிற தென்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். லாபத்திலேயே அவனது கண்ணும் கருத்தும் செல்லும். தக்கபடி லாபம் வருகிறதென்றால் அவன் எத்தகைய அயோக்கியத் தனத்தையும் செய்யப் பின் வாங்க மாட்டான். அவன் அவ்வறையில் நுழைந்ததும், 'நான் உங்கள் வேலையைக் கெடுத்துவிட்டேனா' என்று கேட்டான். அப்போது இந்திராபாய், 'இல்லை, இல்லை. நீ எங்கள் வேலையை எவ்விதத்திலும் கெடுக்கவில்லை. இதோ இந்த நகைகளை எடுத்துக் கொண்டு அதற்கான கிரயத்தைக் கொடுத்துவிடு. நேற்றிரவு ரஸ்தாவில் நான் இவற்றைக் கைப்பற்றினேன். அந்தப் பேர்வழி மிகவும் அஞ்சி நடுங்கியபடியால் ஒழிந்து போகட்டுமென்று விட்டுவிட்டேன். இன்றேல் இன்னும் சில சாமான்களைக் கைப்பற்றியிருப்பேன்' என்று கூறிக்

கொண்டே தன்னிடமிருந்த தங்கக் கடிகாரம், சங்கிலி, நான்கு மோதிரங்கள் ஆகியவற்றை மேஜையின்மீது வைத்தாள்.

அச் சாமான்கள் மேஜையின்மீது வைக்கப்பட்டதும் அங்கே நின்றிருந்த மரகதம் அவற்றைக் கூர்ந்து நோக்கி, அவை முன்னாள் தன்னுடைய விருந்தாளியாக இருந்த தினகரம் பிரபுவினுடையதே என்று நிச்சயித்துக் கொண்டாள். ராட்சஸ குப்பனும் அவற்றைக் கூர்ந்து நோக்கினான். அவனுக்கு அவை யாருடையதென்பது தெரியாவிட்டாலும், சாதாரணமாகவே திருட்டுச் சொத்தோ அல்லது அநீதியான வழியில் அகப்பட்ட சொத்தோ இருந்தால் அதை யாரும் ஆச்சர்யமாகக் கவனிப்பது வழக்கமல்லவா? இந்திராபாயும் கோபாலனுடைய வாயிலிருந்து என்ன வருகிறதென்பதை அறியும் பொருட்டு நகைகளையும், கோபாலனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்ததால் அவள், மரகதம் அந் நகைகளைக் கூர்ந்து பார்ப்பதைக் கவனிக்கவில்லை.

கோபாலனும் அவற்றைத் தன் கையில் எடுத்து விளக்கின் வெளிச்சத்தில் அவற்றைப் பார்த்து விலையை மதிப்பிடத் தொடங்கினான். சிறிது நேரம் அவ்வாறு கவனித்த பின்னர், 'சரிதான். இவற்றின் விலை மிகக் குறைவுதான். என்றாலும் நீ என்னிடம் எப்போதும் தாராளமாக நடந்து கொள்கிறபடியால் போனால் போகட்டுமென்று முப்பது பவுன் கொடுத்துவிடுகிறேன். அதுவும் அதிகமே. ஆயினும் உனக்காகவே அத்தொகையைக் கொடுக்கிறேன்' என்றான்.

அதைக் கேட்டதும் திடுக்கிட்டுப்போன அம்மாது, 'ஓ, அது முடியவே முடியாது. ஐம்பது பவுனுக்கும் குறைவான விலைக்கு இதைக் கொடுக்கமாட்டேன். இப்போது எனக்கு பணத்துக் கொன்றும் அவசரமில்லை. ஆகவே இதற்கு ஐம்

பது பவுன் யாரேனும் கொடுக்கிற வரையில் நான் விற்காம லேயே வைத்துக் கொண்டிருப்பேன். அல்லது நாளை மறு நாள் நான் உன் தம்பி வேலனிடம் சென்று அவன் என்ன விலைக்கு வாங்கிக் கொள்கிறான் என்று பார்க்கிறேன்' என்றாள்.

இந்த நல்ல வியாபாரம் தன் கையினின்றும் போய் விடக்கூடாதென்னும் எண்ணத்துடன், 'இரு, இரு, அவ் வளவு அவசரப்படவேண்டாம். போனால் போகிறது. நீ இவ்வளவு பிடிவாதத்துடன் இருப்பதற்காக இன்னும் பத்து பவுன் சேர்த்து நாற்பது பவுனாகக் கொடுத்துவிடுவேன்,' என்று கூறியதும் இந்திராபாய் கோபமடைந்து, 'அடே கிழப்பையலே! இவ்வளவு குறைந்த தொகைக்கா கேட்கி றாய்? என் சாமான்களை யெல்லாம் கொடுத்துவிடு. எப்படி இருந்தாலும் ஐம்பது பவுனுக்குக் குறைவானால் நான் அவற் றைக் கொடுப்பதில்லை' என்றாள்.

கோபாலன் அந்த மோதிரங்களையும், கடிகாரத்தையும் திருப்பித் திருப்பிப் பார்த்தான். பிறகு முடிவாக வேறு வழியில்லாமல் இந்திராபாய் கேட்டபடியே அவளிடம் ஐம் பது பவுன் கொடுத்துவிட்டு அவற்றை எடுத்துச் சென்றான். கோபாலன் அவ்விடத்தை விட்டகன்றதும் ராட்சஸ குப்பன் 'நாம் இருவரும் சேர்ந்து ஒரு பெரிய வேலையில் இறங்கு வோம் என்று சொன்னாயே அது என்ன? நாம் இருவரும் சேர்ந்து அவ்வேலையைச் செய்வோமாயின் இப்போதிருப்ப தைவிட நமது சினேகம் இன்னும் அதிகமாகும்' என்று கேட்டான். உடனே அவள் ஆத்திரத்துடன், 'ஓ! நான் உன்னுடைய தயவை எதிர்பார்க்கிறேன் என்று நினைக்க வேண்டாம். ஆனால் நான் ஒரு பெரிய வேலையில் உன்னைச்

சேர்த்துக்கொண்டால் பிறகு நீ என்னைப்பார்க்கும்போதெல்லாம் மரியாதையாகப் பேசுவாய்' என்றாள்.

அப்போது ராட்சஸ குப்பன், 'அதிலென்ன சந்தேகம்! நான் உன்னிடம் மரியாதையாக நடந்துகொள்வதுடன் உண்மையான விசுவாசமும் ஏற்பட்டுப்போகும் என்பதில் சந்தேகமில்லை' என்று அன்புடன் பேசுபவன்போல் கூறினன். இந்திராபாய், 'அப்படியானல் நாம் விஷயத்திற்குச் செல்வோம். இரத்தினபுரியின் மத்தியில் மனமோகனர் என்றொரு பிரபல வக்கீல் இருக்கிறார். அவர் மிகப்பெரிய பணக்காரர். தன்னைவிடப் பணக்காரனே இல்லையென அவர் நினைப்பதால் சதா அதிக விலையுள்ள நகைகளை அணிந்துகொள்கிறார். அவர் ஒரு வைர மோதிரம் அணிந்திருக்கிறார். அது அவர் எந்த மைனர் ஜமீன்தாருக்குக் கார்டியனாக இருக்கிறாரோ அந்த மைனரின் தாயாகிய ஒரு சீமாட்டியினல் பரிசளிக்கப்பட்டது. அதன் விலை மட்டும் இருநூறு பவுனுக்கு மேல் இருக்கும். விலையுயர்ந்த கடிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கிறார். மேலும் சதா அவருடைய சட்டைப்பையில் பெருந் தொகை இருந்துகொண்டேயிருக்கும். இதையெல்லாம் அவருடைய வண்டிக்காரனிடமிருந்தே தகவல் தெரிந்துகொண்டேன். இன்று இரவு அந்த மனமோகனர் என்னும் வக்கீல் ஒரு விருந்துக்குச் சென்றிருக்கிறார். அவருக்கு நான் மேலே கூறிய மோதிரத்தைப் பரிசளித்த சீமாட்டியின் வீட்டில் அவ்விருந்து நடப்பதால் அவர் அதிக விலையுயர்ந்த ஆடையாபரணங்களையெல்லாம் அணிந்து சென்றிருக்கிறார். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் அவர் தன் மாளிகைக்குத் திரும்பும்போது வழிமறித்துக் கொள்ளையடித்து எல்லா நகைகளையும் கைப்பற்றவேண்டும் என்று நினைக்கிறேன்,' என்று விஷயத்தைத் தெரிவித்தாள்.

அவள் கூறியதைக் கேட்ட குப்பன் சிரித்துக் கொண்டே, 'அப்படியானால் இப்போது நீ கூறிய வேலையில் நான் உனக்குத் துணைபுரிய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ?' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஆம்; துணைபுரிய வேண்டுமென்று தான் கூறுகிறேன்' என்றாள். உடனே ராட்சஸ குப்பன், 'நான் வண்டிக்காரனைப் பிடித்து மிரட்டிக் கொண்டிருந்தால் நீ அந்த வக்கீலின் மீதிருக்கும் நகைகளைக் கைப்பற்றிவிடுகிறாயோ? அதுதானே நான் செய்யவேண்டியது' என்று கேட்டான். அதற்கு இந்திராபாய், 'ஆம், அதுதான். என் யோசனையை நீ தெரிந்துகொண்டுவிட்டாயே. இதற்குச் சம்மதமா? கொள்ளையில் நமக்குக் கிடைப்பதை இதே கோபாலனிடம் விற்றுவிட்டு வரும் தொகையை நாம் பங்கிட்டுக்கொண்டுவிடுவோம். அதில் ஒரு பாகத்தை அந்த வக்கீலின் வண்டிக்காரனுக்கும் கொடுப்போம்' என்றாள்.

இப்போது அவன், 'சரி; நல்ல வேலைதான். இதில் பிரவேசிப்பதில் எனக்கும் சந்தோஷமே. ஆனால் இப்போது நீ குறிப்பிடும் ரஸ்தா இம்மாதிரியான கொள்ளைகளுக்கு ஏற்றதா? அதிக ஜனங்கள் நடமாடும் இடமோ?' என்று கேட்கவும், அவள் அக்குப்பன் பயப்படுகிறான் என்பதை உணர்ந்து பயம் என்னும் சொல்லைக் கேட்டாலே வெறுப்படைபவள் போல் முகத்தைச் சுளித்துக்கொண்டு, 'அந்த ரஸ்தா கொள்ளைகளுக்கு ஏற்றதுதான். நான் இப்போது கோபாலனுக்கு விற்ற சாமான்களும் நேற்றிரவு அதே ரஸ்தாவில் கொள்ளையடித்ததுதான். இதை யேன் கேட்கிறாய். அது ஒரு வேடிக்கை சம்பவம். நேற்றிரவு நான் இரத்தினபுரியிலிருந்து என் குதிரைமீது சவாரி செய்து சென்றபோது, ஒரு இளைஞன் அந்த ரஸ்தாவில் அலைந்து கொண்டிருந்தான். அவன் தன்னுடைய பெயர் என்னிடம் சொன்னானென்றாலும் அதை

இப்போது தெரியப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவ னுக்கு என் வீட்டில் படுக்க இடம் கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றினேன்' என்று கூறி நிறுத்தியதும், ராட்சஸ குப் பன், 'அப்படியானால் நீ எங்கே வசிக்கிறாய்?' என்று கேட்டான்.

இந்திராபாய் அசிரத்தையாகச் சிரித்துக் கொண்டே, 'நான் எங்கு வசித்தால்தான் என்ன? அந்த இடத்துக்குச் சமீபத்தில் என் வீடு இருப்பதுபோல நடித்து அவனைக் கூப் பிட்டேன். பாவம்! அவனும் என் வார்த்தையை நம்பி என் குதிரைமீது எனக்குப் பின்னால் ஏறிக் கொண்டான். அவன் விழுந்துவிடாமலிருக்கும் பொருட்டு என்னை இரு கரங்களா லும் அணைத்துக் கொண்டபோது, நான் ஆடவனல்ல என் பதை அவன் அறிந்திருப்பா னென்றே நினைக்கிறேன். சிறிது தூரம் சென்றதும் தனியான இடத்தில் அவனைக் கீழே இறக்கி அவனுடையதையெல்லாம் கைப்பற்றினேன்' என்று கூறினாள். அவள் குப்பனிடம் மட்டுமோ அல்லது மாகதத்தி னிடம் மட்டுமோ சொல்பவள் போலின்றி இருவரும் கேட் கும்படி பொதுவாகச் சொல்லி வந்தாள். பிறகு அவள் திடீ ரென்று மாகதத்தைப் பார்த்தபோது மாகதம் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கவனித்தாள். அவள் ஏதோ எண்ணத் துடன்தான் பார்க்கிறாள் என்பதை இந்திராபாய் அறிந்து கொண்டாள். ஆயினும் மாகதம் தனக்கு எத்தகைய மன வெழுச்சியும் இல்லையென்பதைக் காண்பித்துக் கொள்ளும் பொருட்டு, 'அப்படியானால் நேற்றிரவு உனக்கு நல்ல விதமா கத்தான் அமைந்தது. உனக்கு நல்ல அதிர்ஷ்டம்தான்' என்று இந்திராபாயை நோக்கிக் கூறினாள்.

மாகதம் என் ஒருவிதமான எழுச்சியைப் பெற்றாள் என் பதைக் கேட்க மனமில்லாதவளாய் இந்திராபாய், 'ஆம்;

நேற்றிரவு எனக்கு நல்ல விதமாகத்தான் கழிந்தது. இப்போது கோபாலனுக்கு விற்ற நகைகள் மட்டுமே யன்றி அந்த இளைஞனிடமிருந்த பணத்தையும் பிடுங்கிக்கொண்டேன். பாவம்! அந்த இளைஞன் பெரும் பயங்காளி. நான் கொள்ளை யடிக்க முயல்கிறேன் என்று தெரிந்ததும் அவன் தேகம் முழுதும் நடுநடுங்க ஆரம்பித்துவிட்டது. பறி கொடுத்ததை தன் தாயாரிடமும் சொல்லிக் கொள்வான் என்று நான் நினைக்கவில்லை. அது கிடக்கட்டும். இப்போது நான் போகிறேன். குப்பனே! நீ என்னை இன்னும் அரை மணி நேரத்துக்குப் பிறகு நான் குறித்த ரஸ்தாவில் அந்தக் கால் வாயின் பாலத்தினருகில் சந்திக்கிறாயா?' என்று கேட்டான்.

உடனே ராட்சஸ குப்பன், 'ஆஹா! அப்படியே செய்கிறேன். நீ குறிப்பிட்ட இடம் எனக்குத் தெரிந்துவிட்டது. நான் இங்கே சுமார் பதினொன்றரை மணிக்குப் புறப்பட்டால் அந்த இடத்துக்கு நீ குறித்த வேலையில் வந்துசேர்ந்துவிடுவேன்' என்றான். பிறகு இந்திராபாய் என்னும் ஆண் வேடம் தரித்த அம்மாது அவ்விடத்தைவிட்டகன்று தன் குதிரை மீது ஏறிக்கொண்டு போய்விட்டாள்.

186568

186568
...-600 003

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கோலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனும்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 6-பாகமும் ... | 11 | 10 | தபால்கோள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும்... | 3 | 0 | ரத்தினபாய் ... | 1 | 18 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 10 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 2 |
| கனகபூஷணம்2பாகம்... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 12 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

---

விலாசம் : மானேஜர், " ஆனந்தபோதினி " ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.